INFO@PEELTAMILSENIORS.COM
SUBBIAH_MAHES@YAHOO.COM
B3
025

பீல் முது தமிழர் சங்கத்தின்

முதுவேனில் 2009
Muthuvenil

By Senior Tamils Society of Peel

பல கரங்கள் - ஒரு நோக்கம்

Many Hands - One Objective

வருடாந்த சஞ்சிகை

Annual Magazine

Board of Directors (2008-2009)

Standing L-R:

Mr. C.S. Wimalendran, Mr. L. Soosaithasan, Mr. V. Sivarajah, Mr. R. Balasubramaniam
Mr. M.Sinnathamby, Mr. K.Jeganathan

Seated L-R:

Mrs. S.Nagarajah, Mr. S. Makenthiran, Mr. C.Balasubramaniam, Mr. T.Ratnarajah, Mr. Pon Kulendiren, Mr. David Rajaratnam, Mr. A. Jesuthasan, Mr. K.Varapragasam, Mrs. N.Gunanayagam,

Absentees: Mr. K. Sivanathan, Mrs. T. Kanagasabai , Mrs. L. Ratnarajah

BOARD OF DIRECTORS

In Mississauga (2) Locations

CENTRAL PARKWAY PHARMACY

Call **Lina**

Your Family Pharmacist

Tel : 905-272-2400

Fax : 905-272-2450

FREE

FREE DIABETES METER
இலவச நீரிழிவுமானி

FREE LANCET
இலவச கிரிமி நீக்கிய லான்சற்

FREE MEDICATION RECORD BOOK
இலவச மருந்து பாவிக்கும் பதிவு

FREE DELIVERY
இலவச விநியோகம்

GOLUMBIA VIDEO
144. KENNEDY ROAD SOUTH #08
BRAMPTON - ON - L6W - 4G6 - CANADA
T.P -905-4568433 FAX -905-4568281

Central Parkway Pharmacy
1300 Central Parkway West
South West Corner of Burnhamthrope / Creditview
4th Traffic Light West of Burnhamthrope / Mavis
Mississauga, ON
Phone: (905) 272-3400

Trelawny Pharmacy
3899 Trelawny Cir., #9
NW corner of 10th Line & Aquitaine
1 block South of 10th Line & Derry
Phone: (905) 785-8900

DR. ILLANGO & ASSOCIATES

ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office

BRACE FOR A GREAT SMILE

SCARBOROUGH

3852 Finch Ave. East,
Suite 204 & 303
Scarborough, ON.
Tel: 416 292 7004

MISSISSAUGA

3025 Hurontario St.,
Unit 102
Mississauga, ON
Tel: 905 270 7844


Manuel Jesudasan
Barrister, Solicitor & Notary Public
- Immigration
- Criminal Law
- Civil Litigation
- Estate Law
- Real Estate
- Family Law
80 Corporate Drive, Suite 210
Scarborough, On M1H 3G5
mjesudasan@mjlawyers.com
Tel: 416 444 8070
Fax: 416 444 9105

April 2009

Dear Friends,

On behalf of the residents of the City of Mississauga and my colleagues on the Council of the City of Mississauga, I am pleased to extend greetings and congratulations to the Friends, Supporters and Members of the Senior Tamil Society of Peel on this special 10th anniversary of your organization.

Over the past ten years, you have seen your organization group grow from humble beginnings to an organization that supports both your own community and the community at large.

Your Wellness and Recreational Centre, your "Annaiyar Anni" sub-committee and your monthly Pot Luck Lunch are all wonderful examples of the work that you are doing to support each other. Your annual walk-a-thon supports the Trillium Health Foundation and shows that the Senior Tamil Society of Peel takes a true leadership role in our community. Recently, several of your members received Mississauga's Civic Award of Recognition and I would personally like to congratulate those members for this accomplishment.

As Councillor of Mississauga's Ward 10, I am proud of our multicultural make-up. The City of Mississauga now has close to 700,000 residents representing cultures from around the world. I believe that a multicultural community reflects Canada's diversity, and promotes better understanding of our friends and neighbours.

Let me once again offer you sincere congratulations on your 10th anniversary. I know it is just the beginning of many more years of service to the residents of the City of Mississauga and the Region of Peel.

Kindest regards,

Sue McFadden
Councillor
City of Mississauga
Region of Peel

Carolyn Parrish

Councillor, Ward 6

May 2, 2009

Congratulations to the Senior Tamils Society of Peel on the occasion of your 10th Anniversary Celebration!

From only 77 seniors ten years ago to over 700 members today, the Senior Tamils Society of Peel has grown to provide essential and important services not only to Tamil seniors, but to the greater community in Peel. The members of your organization are skilled, experienced and talented individuals who encourage social integration and political awareness in the next generation. As the population of our city ages, I am extremely grateful that committed residents like the Senior Tamils set such a wonderful example of leadership in Mississauga. Your memorable cultural events, free training for members and your admirable fundraising efforts are testament to your impressive commitment to the community.

Though your hearts may remain in your homeland, your efforts here are much-admired. I can only hope that through peaceful protest and humanitarian intervention that peace may soon be realized in Sri Lanka.

I wish the Senior Tamils Society of Peel continued success in the future.

Congratulations again,

Carolyn Parrish
Councillor, Ward 6
City of Mississauga

Ontario



May 2, 2009

Greetings and Congratulations from MPP Peter Fonseca

Dear friends,

On behalf of the Legislature of Ontario, I extend my warmest congratulations and best wishes to the Senior Tamils Society of Peel on the occasion of their 10th anniversary.

As part of our multicultural family, the Senior Tamils Society of Peel plays a significant role in representing and promoting Tamil culture. I commend and thank them for the important contribution they are making to the betterment of our society.

I regret that I am unable to join you in tonight's celebration. However, I wish each of you a most successful and enjoyable evening.

Warmest Regards,

Peter Fonseca
MPP Mississauga East - Cooksville

United, we stand!

The STSP has reached a milestone! Yes, we are celebrating our Tenth Anniversary this year in May 2009. From humble beginnings, our Association has grown and developed into a formidable organization in rendering multifaceted services to the members and at the same time earning recognition of the Government and Local Authorities. Such recognition is manifested, for example, in obtaining grants from various funding agencies including Government Institutions. The Ontario Trillium Foundation giving us a second two year grant of $139,300/= amply manifests the trust and confidence reposed with the Board of Management. Third New Horizon grant for $25,000/= too was given to us for the year 2009 to implement a project to enhance skills to overcome loneliness. We are also applying for the heritage grant for $4,000/= to celebrate Canada day like last year and awaiting results on our application for a second capital grant for $10,000/=. We can be proud that our organization is the only Tamil seniors' organization to get such grants and is financially sound to execute many projects for the benefit of the seniors in the Peel Region. It is emphasized that benefit accrues only when all seniors make use of these projects while more and more should join us. It is imperative that all members forget the petty differences and work as a team to implement the projects for which we got the grants.

It is pertinent to point out that it is the toil and hard work of the President, other Office Bearers, together with the active support and co-operation of all the members made the above achievements possible. Kudos to one and all who contributed in kind, time, energy and expertise in this regard.

In this journey towards progress, the Board has had to face one or two road hogs as well. These apparently disgruntled or frustrated detractors, well known as famous 'petition' writers or 'letter' writers, often flooded the office with unproductive and disruptive letters. The time wasted in attending to these junk mails could have been more usefully spent in attending to the members' needs. It is the duty and in the best interest of members to beware of such saboteurs and not fall prey to their designs. Here, it is worth repeating the discourse of Socrates, the famous Greek Philosopher to his beloved disciple "Ask 'why, for what and how' before acting on any issue. It was such self questioning that made me a sculptor of thoughts" !

The theme of the cover page is United in Action ! In keeping with the Tamil saying "Adamban kodiyum thirandaal midukku" which means "Even the (frail/fragile) Adamban creepers get strong when bundled together", this is a clarion call to all members to continue to be united in action with the Board of Management to steer the course of STSP to greater heights.

While taking pride to celebrate the Tenth Anniversary, let us also remember and salute the pioneers who founded our Association. Let us work with more dedication and unity to realize their dreams.

Editor
Muthuvenil 2009

அன்பின் அங்கத்தினர்களே

இது சங்கத்தின் ஏழாவது முதுவேனில் வருடாந்த சஞ்சிகை. முதுவேனில் ஆறு பருவங்களில் பங்குனி சித்திரை மாதங்களுக்குரியது. அங்கத்தினர்களின் எழுத்து ஆக்கத் திறமையை வெளிக்கொணரும் மலரிது.

ஒரு சங்கம் என்பது ஒரு குறிக்கோளை அடைவதற்காக பலர் ஒன்று சேர்ந்து செயல்படும் அமைப்பாகும். அதுவும் முதியோர் சங்கத்தில், அனுபவம், அறிவு, ஆற்றல், திறமை ஆகியவற்றை உள்ளடக்கிய பலர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய சேவை சங்கத்திற்குத் தேவை. ஒரு சிலரின் ஈடுபாட்டினால் மட்டுமே சங்கம் செயல்பட முடியாது. தவறுகளை சுட்டிக்காட்டினால் மட்டும் போதாது எல்லோருடைய ஒத்துழைப்பு மிக முக்கியம். காலம் சென்ற அமெரிக்க ஜனாதபதி ஜோன் கெனெடி அமெரிக்கர்களுக்கு சொன்னார் "அமெரிக்கா எனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட நீ அமெரிக்காவுக்கு என்ன செய்தாய் என உன்னைக் கேள்:" என்றார். இதே கேள்வி எமது சங்கத்துக்கு சாலப் பொருந்தும்.

கருத்துக்கள் மாறுபடலாம் ஆனால் அந்த வேற்றுமையிலும் ஒற்றுமையைக் காணலாம். எமது சங்கம் கடந்த பத்து ஆண்டுகளில் வெகு விரைவாக விரிவடைந்து வருகிறது. சமூக சேவை. அங்கத்தினர் சேவை, பல்கலாச்சார ஒற்றுமை, விளிப்புணர்வு, போன்ற பலதரப்பட்ட விடையங்களில் நமது சங்கம் முன்னேறி வருகிறது. ஒரு காலத்தில் இயங்க இடம் , நிதி. திட்டம் போன்றவைக்கு தட்டுப்பாடு இருந்தது. காலப் போக்கில் பல தடைகளைத் தாண்டி எமது சங்கம் பல மான்யங்களை பெற்று பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது, புதுப்புது சாதனைகளை நிலைநாட்டியும் வருகிறது. அதில் 2008ம் ஆண்டு நாம் நடத்திய 6ம் நடைபவனி மூலம் சேகரித்த பணம் சுமார் 17,000 டொலர்கள். இப்பணம் பீல் வைத்தியசாலைகளுக்கும் உள்நாட்டில் புலம் பெயர்ந்து கஷ்டப் படும் நம் இன மக்களுககும் பகிர்நது அளிக்கப்படுகிறது.

சங்கத்தின் நிதி நிலமை மிகவும் திருப்திகரமாக இருப்பதினால் மேலும் மானியங்கள் பெறக்கூடியதாக இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு சுமார் $140,000 க்கு Ontario Trillium Foundtaion மானியமாக தந்துள்ளது. New Horizon யிடமிருந்து சுமார் $ 25,000 மானியமாக கிடைக்கக் கூடிய வாயப்புமுண்டு. கிடைத்த மானியங்களை சரிவர பயன்படுத்த செயல் திட்டம் மானியம் தந்தவர்களுக்கு சமர்பிக்கப் பட்டுள்ளது. அத்திட்டத்தின் படியே நாம் செயலாற்றி அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும்.

சூழல், மின் சக்தி விரையம், பருவநிலை பற்றிய விடையங்களில் அங்கத்தினர்களிடையே விளிப்புணர்வு ஏற்படுத்துவது நமது செயல் திட்டத்தில் முக்கிய இடம் பெறுகிறது. அதோடு கணனி பயிற்ச்சி . தேகநலம் பற்றிய கருத்தரங்குகள், தொண்டர் சேவை, அறிவு வளர வாசகசாலை, உங்கள் பிரச்சனைகள் தீர ஆலோசனைகள், தேகபயிற்ச்சி, தனிமையைப் போக்க பொழுது போக்கிற்கான விளையாட்டுகள் இவைகளும் சங்கத்தின் செயற்பாடுகளில் உள்ளடங்கும். தினமும் எத்தனை அங்கத்தினர்கள் சங்கத்திற்கு வருகை தருகிறார்கள் என்பதை கணித்து மானியம் தந்தவர்களுக்கு சமர்பிக்கும் அறிக்கையில் குறிப்பிடுகிறோம். ஆதலால் உங்கள் அனைவரையும் பீல் முது தமிழர் சங்கம், பயன் பெற கைகூப்பிவரவேற்கிறது. அதோடு தொண்டர் சேவையில் ஈடுபட்டு மனச்சாந்தி பெறுங்கள்.

நன்றி

பொன் குலேந்திரன்

பீல் முது தமிழர் சங்கம்

EDITORIAL SUB COMMITTEE

Ex-Officio-President
Mr. Pon Kulendiren

English
Mr. A. Jesuthasan
Mr. K. Sivanathan

Tamil
Mr. M. Sinnathamby
Mrs. P. Varapragasam

Graphics & Layout
Mr. S. Maheswaran
Sivakumar Boju

Muthuvenil 2009
is published by:
Senior Tamils Society of Peel
3085 Hurontario Street
Suite 215
Mississauga, ON. L5A 4E4
Tel/Fax : 905.290.3000

வீடு வாங்க விற்க,
மற்றும் ஆயுட் காப்புறுதி
தேவைகளுக்கும்
KEN KIRUPA
Sales Representative
416 294 9322
416 830 8191
055 McNicoll Ave. Toronto, ON
416 491 4002
familyprotection.ca
759 Warden Ave. Toronto, ON

Batterysonic Inc.

Supplying all types of batteries and battery packs for your Household, Mobile and Industrial needs.

Applications Include:

- Alarm Systems
- Automotive
- Calculators
- Cameras, Clocks
- Cordless Phones
- Flash Lights
- Garage Door Openers
- Hearing Aids
- Home Electronics
- Smoke Detectors
- UPS Battery Back-Up
- Toys, Watches

And much more!!

Tel: 905-564-8484 Toll Free: 1-866-251-4473
Email: sales@batterysonic.com www.batterysonic.com

1215 Meyerside Dr., Unit #6, Mississauga, Ontario. L5T 1H3
Hours: Mondays - Fridays 8.30A.M—5.00 P.M

DURACELL Panasonic RITAR SONY
saft maxell Energizer SANYO

பொன் குலேந்திரன்

பங்குக் கிணறு

வக்கீல் வரதராஜா கிருஷ்ணபிள்ளையின் குடும்ப வக்கீல். அதோடு மட்டுமல்ல கிருஷ்ணபிள்ளையின் தந்தை இராமநாதபிள்ளையின் சொத்துக்களையும் கவனித்து வந்தவர். இராமநாதபிள்ளையின் மறைவுக்குப் பின்னர் மகன் கிருஷ்ணபிள்ளையின் குடும்பவக்கீலாக இயங்கினார். அதனால் அவரின் சொத்து, குடும்ப விபரம் முழுவதும் அவருக்குத் தெரியும். வக்கீல் வரதராஜாவின் முகத்தைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தாள் கிருஷ்ணபிள்ளையின் மூத்த மகள் இராஜலஷ்மி. அவளது கேஸ் சம்பந்தப்பட்ட பைலை புரட்டியபடி சிந்தனையில் இருந்தார் வக்கீல். மூளைக்கு உரம் கொடுக்க அவருடைய கிளார்க் மேசையில் கொண்டுவந்து வைத்த சுக்கு போட்ட கோப்பியை உறிஞ்சு குடித்தார். அவரிடம் தனது கேஸ் விஷயமாக கதைக்க வந்து குறைந்தது அரைமணி நேரமாகிவிட்டது என்பதை இராஜலஷ்மி உணர்ந்தாள். அவள் வக்கீலை சந்திக்க வந்தது இது முதல்தடவையல்ல. இதுவரை பீஸாக மட்டும் ரூபாய் பத்தாயிரம் கொடுத்திருப்பாள். இந்தக் கேஸை மட்டும் வக்கீல் வென்று தந்தால் தான் திடீர் பணக்காரியாகிவிடலாம். இருக்கிற கடன்களையும் தீர்த்துவிடலாம். அது மட்டுமல்லாமல் தனது சகோதரிகள் பாக்கியத்துக்கும் விஜயாவுக்கும் சொத்தில் ஒன்றுமே கிடைக்காமல் செய்துவிடலாம். பங்குக் கிணறு முழுவதும் தனக்குச் சொந்தமாகிவிடும். வேலி போட்டு சகோதரிகள் இருவரையும் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாமல் செய்துவிடலாம். அப்பாவும் அம்மாவும் இப்ப இருக்கிற வீடு, என் தாத்தா, தலைப்பிள்ளையான அம்மாவுக்கு எழுதிக் கொடுத்தது. அந்த பெரிய வீடும் கிணறும் அவையள் இரண்டு பேரும் கண்மூடிய பின் முறைப்படி தலைப்பிள்ளை எனக்குத் தான் வரவேண்டும். அப்ப தெரியும் அவையளுக்கு நான் யார் என்று, மனதுக்குள் கறுவிக் கொண்டாள் இராஜலஷ்மி.

இராஜலஷ்மி , பாக்கியலஷ்மி. விஜயலஷ்மி என்ற பெயர்களில் கிருஷ்ணபிள்ளை ருக்மணி தம்பதிகளுக்கு மூன்று பெண்கள் பிறந்தார்கள். வாரிசுக்கு ஒரு ஆண்பிள்ளை கூட கிருஷ்ணபிள்ளை தம்பதிகளுக்கு இல்லை. சிறு வயது முதற்கொண்டே சகோதரிகளுக்கிடையே எப்போதும் சண்டை சச்சரவு தான். உணவிலும் கூட தமக்கு விரும்பியதைத் தான் சமைக்க வேண்டும் என அடம் பிடிப்பார்கள். ஆடைகள் வாங்குவதிலும் பிரச்சனைகளை உருவாக்கி வாக்குவாதப்படுவார்கள். ருக்மணியின் கணவன் கிருஷ்ணபிள்ளை எவ்வளவு கட்டுப்பாட்டுடன் பிள்ளைகளை வளர்த்தாலும் ருக்மணி கொடுத்த செல்லத்தால் தங்கள் போக்கில் வீட்டைப் போர்களமாக்கினார்கள் பிள்ளைகள். தகப்பனைக் கண்டவுடன் மட்டும் அமைதியாகிவிடுவார்கள். ருக்மணி தன் பிள்ளைகளின் போக்கைப் பார்த்து கவலைப் படாத நாளே இல்லை. அவர்களை ஏன் பெற்றோம் என்றாகிவிட்டது அவளுக்கு. பிள்ளைகளின் போக்கு கிருஷ்ணபிள்ளையின் தேகநலத்தை வெகுவாக பாதித்தது. தன் நண்பர்களிடம் சொல்லி கவலைப்பட்டார்.

“இந்த மூன்றும், இப்பவே நாய்கடி பூனைகடி என்றால் நாங்கள் இல்லாத காலத்தில் எப்படி ஒற்றுமையாக வாழப்போகுதுகளோ” என்று கவலைப்.பட்டாள் ருக்மணி

“ எல்லாம் நீ கொடுத்த செல்லம். தட்டிக் கேட்காமல் பாசத்தோடு வளர்த்தாய். அதுகளுக்கு உன் பாசம் விளங்கவில்லை. இனி வரப் போகிற கணவன்மார் எப்படி இருக்கப்போகினமோ. குடும்பத்துக்குள் சண்டை வரப்போகுது.” மனைவி மேல் குறைபட்டார் கிருஷ்ணபிள்ளை.

கிருஷ்ணபிள்ளை மலேசியாவுக்கு சென்று பிரித்தானிய ஆட்சியின் போது ஸ்டேசன்மாஸ்டராக ஈபோ, பீனாங், கோலாலம்பூர் ஆகிய இடங்களில் வேலைசெய்து ஏராளமான சொத்துச் சம்பாதித்தவர். உரும்பிராயில் மலையன் பென்சனியர் கிருஷ்ணபிள்ளையை தெரியாதவர்கள் இல்லை. கோயில் காரியங்களுக்கு அள்ளி கொடுத்தார். அவரின் பிள்ளைகளில் இராஜலஷ்மியும், பாக்கியலஷ்மியும் மலேசியாவில் பிறந்தவர்கள். கடைக்குட்டி விஜயலஷ்மி மட்டும் அவரது சொந்தக் கிராமமான உரும்பிராயில் பிறந்தவள். பிள்ளைகளை வேம்படி பள்ளிக்கூடத்தில் காரில் அனுப்பி படிப்பித்து, சொத்துக்கள் வெளியே போகாமல் இருக்க சொந்தத்துக்குள் திருமணமும் செய்து வைத்தார். ஆனால் திருமணத்துக்குப் பின்னர் சகோதரிகள் மூவருக்குமிடையே எவர் காசுக்காரர்?, யாருடைய கணவன் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்?, படிப்பில் யார் பிள்ளை கெட்டிக்காரன், யாருடைய வீடு வசதியான பெரிய வீடு? போன்ற அற்ப விஷயங்களால் அவர்களுக்கு கிடையே ஒற்றுமை இருக்கவில்லை. போட்டி பொறாமையால் குடும்பங்களுக்கிடையே நல்ல உறவு இருக்கவில்லை. சகோதரிகள் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து தனது பெரிய காணியில் அவர்களுக்கு ஒரே மாதிரியான மூன்று வீடுகளை கட்டிக்கொடுத்தார் கிருஷ்ணபிள்ளை. ஆனால் மூன்று குடும்பங்களுக்கு பாவிப்பதற்கு பொதுக் கிணறும், பலாலி வீதியோடு இணைக்கும் பொதுப்பாதையும் அமைத்துக் கொடுத்ததினால் பல பிரச்சனைகள் மூன்று

குடும்பங்களுக்குள் வளரத்தொடங்கியது. அதோடு வீட்டு எல்லைப்பிரச்சனை வேறு

அவர் மனைவி ருக்மணி கடைசிக் காலத்தில் பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் வாழ விரும்பினாள். ஆனால் கிருஷ்ணபிள்ளை அதை விரும்பவில்லை. காரணம் பிள்ளைகள், தன் பென்சன், தான் இருக்கும் வீடு, யாருக்கும் எழுதாத தம்பதிகள் பெயரில் இருக்கும் இருபது பரப்பு தோட்டக் காணி, கடைசி காலத்துக்கு தான் இல்லாத போது மனைவிக்குத் தேவையாக சேர்த்து வைத்த வங்கிப் பணம் ஆகியவற்றில் அவர்கள் கண்வைத்திருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். தனக்குக் கிடைக்கும் பெரும் தொகை மலேசியன் பென்சனில் தாங்கள் இருவரும் வசதியாக தனக்கு சீதனமாக கிடைத்த நாலு அறைகள் கொண்ட மாளிகை போன்ற வீட்டில் வாழலாம் என்று தீர்மானித்தார். பிள்ளைகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டு மூன்று வருடங்கள் மட்டுமே அவர்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள். பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணபிள்ளை, படுத்தபடுக்கையாகி சொற்பகாலத்தில் கண்ணை மூடிவிட்டார். கண்ணை மூடமுன்னர் எக்காரணத்தாலும் பிள்ளைகளோடு ருக்மணி வாழக் கூடாது என்பது அவர் கட்டளை. பிள்ளைகள் ஒருவராவது அவரது கடைசி காலத்தில் உதவவில்லை. கிருஷ்ணபிள்ளையின் மறைவுக்கு பின்னர் ருக்மணி தனித்துப் போனாள். உதவிக்கு கிருஷ்ணபிள்ளையின் தூரத்துச் சொந்தக்காரர் ஒருவருடைய மணமாகாத பெண் சித்திராவை உதவிக்கு வைத்துக்கொண்டாள். அமைதியான குணமுள்ள சித்திரா, ருக்மணியை தன் சொந்தத் தாய் போல் சமையல் முதற்கொண்டு வீட்டுவேலை வரை செய்து கவனித்து வந்தாள்.

*****

"உம்முடைய கேசை கவனமாக படித்தனான். கிணற்றில் உமக்கும் இரு சகோதரிகளுக்கும் பங்கு வைத்துத் தான் உங்கடை அப்பா வீடு கட்டி தரும் போது பத்திரத்தில் எழுதியிருக்கிறார். மூன்று குடும்பங்களும் பாவிக்கவசதியாக பாலாலி வீதியை இணைக்கும 12 அடி அகலமான பொதுப்பாதை போட்டுகொடுத்திருக்கிறார்.. நீங்கள் படலை போட்டு மற்றவர்களின் போக்கு வரத்தை தடுப்பது சட்டப்படி தவறு. காரணம், தானும் அவர் மனைவியும் இல்லாத காலத்தில் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காக பங்கு வைதது எழுதியிருக்கிறார். அதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். உங்கள் மூன்று பேருக்கும் தந்த காணிகளோடு சேர்ந்திருக்கும் இருபது பரப்பு தோட்டக் காணியும், அவருக்கு சீதனமாக கிடைத்த பெரிய வீடும் இன்னும் எவர் பெயருக்கும் எழுதப்படவில்லை. உங்கடை தாயார் என்ன யோசித்திருக்கிறாரோ தெரியாது. ஆனால் உயில் எழுதி வைத்திருப்பதாகவும் தான் கண்மூடிய பின்னரே அதைத் திறக்கும் படி எனக்குச் சொன்னார். அவர் மனது புண்பட நீங்கள் நடக்க வேண்டாம். அது உங்களுக்கு நல்லதல்ல" வக்கீல் அமைதியாக ஆலோசனை சொன்னார்.

"நான் தான் மூவரிலும் மூத்தவள். கூடப் படித்தவள். எனக்குத் தான் கூடிய சொத்து அப்பா எழுதி வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி கிணறு வெட்டியிருக்க வேண்டும். அப்பா இப்ப இல்லை. அம்மாவுக்குப் பிறகு அவர்கள் இப்போ இருக்கிற வீடு முத்தவளான எனக்குத்தான் சேரவேண்டும். அப்படித்தான் என் மேல் அன்பு வைத்திருந்த பாட்டியும் பாட்டாவும் நான் பிறந்த போதே சொன்னவர்கள் என்று அம்மா அடிக்கடி எனக்குச் சொல்லுவா. என் பாட்டனார் இராமநாதபிள்ளைக்கு என் மேல் கொள்ள ஆசை.. அது உங்களுக்குத் தெரியும் தானே. ஆதனால் தான் அவர்தான் எனக்கு இராஜலஷ்மி என்று பெயர் வைத்தவர்"

"பேருக்கும் உயிலில் எழுதிய விஷயத்துக்கும் தொடர்பு கிடையாது பிள்ளை. அது சரி நீங்கள் மூவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்தவர்கள். ஒரே இரத்தம் தானே ஓடுது. எதற்காக உங்களுக்குள்ளை வீணாகச் சண்டைபிடிக்க வேண்டும. உங்களைப் பார்த்து உங்கடை பிள்ளைகளும் விரோதம் காட்ட தொடங்குவினம். பிறகு இந்த ஒற்றுமையின்மை பரம்பரையாக வளர தொடங்கிவிடும். ஊர் சனங்கள் கூட உங்களை சண்டைக்காரக் குடும்பம் என்று பகிடிபண்ணும். ஒரு வருத்தம் துன்பம் என்றால் உங்கள் குடும்பங்கள் ஒன்றுக்கு ஒன்று உதவியாக இருக்க வேண்டும்." புத்திமதிகளை வக்கீல் தொடர்ந்து சொன்னது இராஜலஷ்மிக்கு பிடிக்கவில்லை.

" நீங்கள் ஒற்றுமையைப் பற்றி பேசுகிறீர்கள். அதை எண்டை தங்கச்சிமார் இரண்டு பேருக்கும் உபதேசம் செய்யுங்கள். பொதுக்கிணத்தில் ஒரு கீழ்சாதி ஆள் ஒருவரை தண்ணி அள்ள விட்டிருக்கிறார் பாக்கியத்தின் புருஷன். அவர் கொம்யூனிஸ்டாக இருக்கலாம், அதோடு அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்கு உங்கடை எம்பியைத் தெரியும். அவர் என் கணவனுக்கு கிட்டத்துச் சொந்தம். அரசியல் காரணத்துக்காக கீழ்சாதி சனங்களை எங்கடை கிணத்திலை தண்ணி அள்ள விட்டு நீரை மாசுப்படுத்த வேண்டுமா? ஆதைப்பற்றி என்டை அவர் பாக்கியத்தின் புருஷனிடம் கேட்டபோது "கணக்க கதைத்தால் கிணற்றுக்குள் பொலிடோல் ஊத்தி போடுவன் எண்டு வெருட்டுகிறார். சண்டித்தனம் காட்டுகிறார். எண்டை அவருக்கும் கொட்டடி ராஜேந்திரன் போன்ற சண்டியர்களின் ஆதரவு இருக்கிறது என்பது அவருக்குத் தெரியாது போல.


VITHUS VIDEO
(905)290-6925
$1.00
ALL DVD's
$1.00
PAL<->NTSC<->SECAM
நாடகங்கள்
திரைப்படங்கள்
Audio Cd's
MP3's
அனைத்தும் மிகக்குறைந்த
விலையில் பெற்றுக்கொள்வதற்கு..
*TAMIL *HINDI* TELUGU *MALAYALAM*
KANNADA *SINHALA
VITHUS VIDEO

With the best compliments from

Dr. Ratnasingham Mohan

Family Dentist

டாக்டர் இரத்தினசிங்கம் மோகன்

குடும்ப பல் வைத்தியர்

Mississauga

3033 Palstan Road
Suite 206
Mississauga, ON. L4Y 4E7
Tel : (905) 949 5656

Open 6 Days a Week

Scarborough

2190 Warden Ave.
Suite 205
Scarborough, ON. M1T 3N9
Tel : (416) 491 9993

Thursdays

அது மட்டுமே எனக்கு சொல்லாமல் மெசின் போட்டு கிணற்றை இறைத்து தண்ணீர் முழுவதையும் தன் தோட்டத்துக்கு மட்டும் விட்டிருக்கிறாள் விஜயா. என்றை அவர் குளிக்கப்போனபோது கிணத்திலை தண்ணி இல்லை. நாங்கள் மூவரும் தண்ணி அள்ளும் போது எங்கடை சொந்த வாளிகளைத் தான் பாவிப்பம். ஒரு நாள் எங்கடை வாளியை களட்டி கிணத்துக்குள்ளை வேண்டுமென்று போட்டிட்டினம். பொதுக் கிணறை எனக்கு சொல்லாமல் அவளுக்குத் தெரிந்த ஆளைக் கொண்டு இறைத்துப் போட்டு செலவுக் காசை மட்டும் பங்கு கேட்டு வந்திட்டாள். அதோடை இரண்டு பேரும் புது வேலி போடுகிறோம் என்று வேலியை தள்ளிப் போட்டு எனது காணியில் ஆறு அங்குல நிலத்தை ஆக்கிரமித்துவிட்டுதுகள். அதோடை மட்டுமா? பாக்கிய லஷ்மி என்டை வேலி கதியால்களில் இருந்த இலைகளை வெட்டி எனக்குத் தெரியாமல் விற்றுப்போட்டாள். தென்னம் ஓலையால் அடைக்கப்பட்ட வேலியில் ஓட்டை வைத்து எங்கடை வீட்டை யார் வந்து போகிறது எண்டு விடுப்பு பார்க்கிறது தான் அவளுக்கு வேலை. நான் இனி காசு செலவழித்து சேவையரைக் கொண்டு காணியை அளப்பிக்க வேண்டும். "சண்டைக் கோழி போல் சிலிர்த்து நின்று பொரிந்து தள்ளினாள் இராஜலஷ்மி.

வக்கீலுக்கு அவள் சொன்னதைக் கேட்டபோது சிரிப்பு வந்தது." இப்ப நீர் என்னோடை கதைக்க வர முந்தி உம்முடைய இரண்டு சகோதரிகளும் வெவ்வேறு நேரம் பார்த்துவந்து ஒருத்தரைப் பற்றி ஒருத்தர் முறையிட்டுப் போட்டு போயிருக்கினம். பொதுப்பாதையிலை தங்கடை பகுதியிலை கல்லும் முள்ளும் போட்டு தாங்கள் போக வர இடைஞ்சல் செய்ததுக்கு அவையளும் உம்மேலை கேஸ் போடப் போகினமாம். இந்த ஒற்றுமையின்மையாலை மூவருக்கும் தான் செலவு".

" கேஸ் போட்டுப் பார்க்கட்டும் யார் வெல்கிறது எண்டு பார்ப்பம். செலவைப் பற்றி எனக்கு கவலையில்லை. என்றை அவர் துபாயிலை ஒயில் கொம்பெனியிலை வேலை. நல்ல சம்மபளம். என்ன செலவு வந்தாலும் அவையளுக்கு பாடம் படிப்பிக்காமல் விடப் போவதில்லை. நான் வாறன்". தான் வந்த காரியம் சரிவரவில்லை என்று வேறு வக்கீலை வைத்து கேஸ் வைக்க வேண்டும் என்று கருவிக் கொண்டு சென்றாள் இராஜலஷ்மி.

******

ஒரு நாள் ருக்மணியின் திடீர் மரணம் ஊரையே அதிர்ச்சியடைய வைத்தது. ருக்மணி வீட்டுக்கு மா இடிக்க வரும் செல்லத்துக்கு ருக்மணியின் பிரிவால் மனதில் உள்ள பெரும் மனக் கவலை. கண்களில் கண்ணீர் வடிய " என்ன நல்ல மனமுள்ள மனுசி. கஷ்டப்படுகிற ஊர் சனங்களுக்கு எவ்வளவு உதவி செய்வா. புருஷன் செத்து இரண்டு வருஷம் கூட ஆகவில்லை. பிள்ளைகளோடை இருந்து கஷ்டப் படவேண்டாம் என்னோடு வா என்று அவர் கூட்டிக்கொண்டு போயிட்டார். உவளவை தான் அந்த மனுசனும் மனுசியும் சாகக் காரணம்" என்று கவலைப்பட்டாள்.

ருக்மணியின் இழவு வீட்டுக்கு ஊரே திரண்டு வந்திருந்தது அவ்வளவுக்கு அவள் பல ஊர்சனங்களுக்கு உதவிசெய்திருக்கிறாள். சில விதவைகள் கூட்டம் பல இழவு வீடுகளுக்குப் போய் கூலிக்கு மாரடித்து பழகினவர்கள். இழவு வீடுகளில் தம்கணவன்மாரை நினைத்து ஒப்பாரி வைப்பார்கள். சிலருக்கு ருக்மணிபற்றி அவ்வளவுக்குத் தெரியாது. கூலிக்கு மார்படிப்பவர்கள். இழவு வீடுகளில் போய் அழுதால் எதும் நாலு பணம் கிடைக்கும் அவர்களுக்கு. அவர்களோடு சேர்ந்து இராஜலஷ்மி, பாக்கியம், விஜயா மூவரும் போட்டிக்கு ஒப்பாரி வைத்தார்கள். இதில் இராஜலஷ்மி தாயின் பிரிவு தாங்க முடியாமல் மூர்ச்சித்து விழுவது போல் நடித்தாள். ஆனால் மூன்று சகோதரிகளின் பார்வைகள் மட்டும் ருக்மணியின் பிரேதத்தின் காதுகளில் போட்டிருந்த ரங்கூன் வைரத் தோட்டிலும், கழுத்தில் இருந்த பத்து பவுண் தங்கச் சங்கிலியிலும், கையில் இருந்த தங்க வலையல்களில் மேல் தான் இருந்தது.

"அம்மாவுக்கு சொன்னனான் அப்பா போன பிறகு என்னோடை வந்திருக்கும் படி. வந்திருந்தால் இது நடந்திருக்காது" என்று கதறினாள் பாக்கியம்.

"அம்மாவுக்கு, நான் கடைக்குட்டி என்று என்னிலை அவவுக்க எவ்வளவு அன்பு. என்னோடை வந்திருங்கோ அம்மா எண்டு எத்தனை தடவை கேட்டனான். அவ கேட்கவில்லை. எங்கள் குடும்பத்துக்கு அம்மா தான் எல்லாம். இனி என்ரை பிள்ளைகள் அம்மம்மா எங்கே எண்டு கேட்டால், நான் என்ன பதில் சொல்லப் போறன்" விஜயா தன் கணவன் வழி இனத்தவர்களை கட்டிப்பிடித்து கதறினாள்.

மூலையில் ஒதுங்கி இருந்த செல்லத்துக்கு மூன்று பிள்ளைகள் அழுதது எல்லாமே நடிப்பாகத் தெரிந்தது. "இப்ப ஏன் ஆக்களுக்குக் காட்டவே இதுகள் ஒப்பாரி வைக்குதுகள். சொத்துக்கு ஊரிமை கொண்டாடவே. உவள் சித்திராதான் அம்மாவை கடைசி வரை கவனித்தவள். அவளிண்டை மடியிலை தான் அவவுடைய உயிர் போயிற்று. அப்ப இந்த மூன்று பேரும் எங்கையாம் போயிட்டினம்?" என்று முணுமுணுத்தாள்.

பக்கத்தில் அதை கேட்டுக் கொண்டிருந்த செல்லத்துக்கு தெரிந்த ருக்மணியின் சொந்தக்காரி ஒருவள் " சரியாய் சொன்னாய் செல்லம். இந்தப் பிள்ளைகளின் ஒற்றுமையின்மைதான் ருக்குவின் உயிரை கெதியிலை கொண்டு போயிட்டு. இப்ப அவவிட்டிட்டு போன ஏராளமான

சொத்தைச் சுருட்டிக் கொண்டு போக வந்திருக்கினம், கிடைத்தது போதாதெண்டு" என்று ஒத்துப்பாடினாள்.

ஆண்வாரிசு இல்லாதபடியால் யார் கொள்ளி வைப்பது என்ற பிரச்சனை உருவாகிபோது இராஜலஷ்மி தன் மகன் தான் வைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். தகப்பன் உயிரோடை இருக்க அவன் கொள்ளி வைப்பது முறையில்லை என்றார், முறைகள் தெரிந்த ஒரு கிராமத்து முதியவர். இறுதியில் ருக்மணியின் தங்கை மகனுக்கு அந்த உரிமை கிடைத்தது. ருக்மணியின் பிரேதம் வேலி வெட்டி பாடையில் சுடலைக்கு போனபோது தங்கள் உரிமையைக் காட்ட மூன்று பிள்ளைகளும் வீதி மட்டும் போய் கதறி அழுது பிரியாவிடை கொடுத்து விட்டு வந்தனர்.

காடாத்து முடிந்து மறுநாள் ருக்மணியின் பிள்ளைகள் குடும்பம் இனத்தவர்கள் ஆவலுடன் வக்கீல் வரதராஜன், கிருஷ்ணபிள்ளை- ருக்மணி தம்பதிகள் எழுதிப் போட்டு போன உயிலை தொண்டையை கனைத்துக் கொண்டு, வாசிக்கத் தொடங்கினார். எலலோருண்டய கவனமம் அவர் மேல் இருந்தது.

" இந்த இறுதி உயில் கிருஷ்ணபிள்ளை- ருக்மணி ஆகிய நாமிருவரும் சுயநிலயில் எழுதிய உயிலாகும்.

இராஜலஷ்மி , பாக்கியலஷ்மி. விஜயலஷ்மி ஆகிய எங்கள் முன்று பிளளைகளுக்கு எல்லா வசதிகளும் படிப்பும் கொடுத்து வளர்த்து நல்ல இடத்தில் சீதனம் கொடுத்து திருமணம் செய்துவைத்தோம். ஆனால் சகோதரங்களுக்கிடையே சிறு வயது முதற்கொண்டு ஒற்றமையில்லாது வாழ்ந்தனர். திருமணமான பின்னரும் முன்று குடும்பகளுக்குள் ஒற்றமையில்லை. அதனால் பட்ட கவலையே எம்மை வருத்தக்காரர் ஆக்கிற்று. எம்மில் ஒருவர் இறந்த பிறகு எமக்கு உதவியாக கடைசி காலத்திலை சித்திரா தன் சொந்த பெற்றோர் போல் கவனிப்பாள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அக்காரணத்தால் சித்திராவுக்கு ருக்மணியின் மனைவியின் நகைகளும், வங்கியிலை இருக்கிற எமது எழுபது இலட்சம் ரூபாய் பணத்தில் எமது இறுதிச் சடங்கு செலவு. வக்கீல் செலவு, வரி போக, இருபது இலட்சம் ரூபாயும், எழுதப்படாத இருபது பரப்புத் தோட்டக் காணியையும் எழுதி வைக்கிறோம். நாங்கள் இருந்த வீட்டை முதியோர் வாழும் இல்லமாக மாற்றி மூன்று பேர் கொண்ட அறக்கட்டளை மூலம் பரிபாலனம் செய்ய வேண்டும். அதற்காக வங்கியில உள்ள மிகுதி பண்த்தை அன்பளிப்பாக தானம் செய்கிறேன். இதற்கான நடவடிக்கையை ' வக்கீல் வரதராஜாவின் பொறுப்பில் விடுகிறேன்.

இப்படிக்கு
கிருஷ்ணபிள்ளை - ருக்மணி
இராஜலஷ்மி , பாக்கியலஷ்மி. விஜயலஷ்மி ஆகிய மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி வாயடைத்து போய் நின்றனர். வக்கீல் உயில் வாசித்ததைக் கேட்டுக்கொண்டிருந்த செல்லம். "இது இவையளுக்கு ஒரு நல்லபடிப்பினை. இனியாவது ஒற்றுமையக வாழப் பழகவேண்டும்" என்றாள். : ''பெற்றோரின் சொத்தை நம்பி வாழ்ந்த உவர்களுக்கு உது வேண்டும்'' என்றது ஒரு குரல்.

*****

கவிதை பொன்

இயற்கையில் ஒற்றுமை

இயற்கையைப் பார்த்தாவது
இயங்கபார் ஒற்றுமையாகத் தமிழா!
கருத்துகள் வேறுபட்டாலும் நீ
கடைசியில் அடைய நினைப்பது ஒன்றே!
கடலோர அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கு என்பது முதியோர் வாக்கு
சிதைந்து நிற்கும் தமிழர்களே நீங்கள்
சிந்தித்து ஒன்றினைந்தால் தமிழினம்
சிறைப்படையும்.
கரை வலை இழுப்போரின்
கட்டுப்பாடுள்ள ஒத்துழைப்பை
பார்த்தாவது ஒன்றுபட்டு செயலாற்றினால்
பயந்தோடுவான் எதிரியும் புறமுகம்காட்டி

உணவுக்காக ஒன்றாக ஊர்ந்து செல்லும்
எறும்பு வரிசையைப் பார்த்தாவது பாடம் கற்று
உனக்குமட்டும் வாழாமல்
அனைவருடன் சேர்ந்து உற்பத்தியை பெருக்கு
வானில் முக்கோண வடிவில்
ஒன்றாக பறக்கும் பறவைகளைப் பார்
தலைவன் ஒருவன் வழிகாட்ட
தயங்காது செல் வேற்றுமை தவிர்த்து

தேனுக்காக கூடுகட்டும்
தேனீக்களிடம் தான் என்ன ஒருமைப்பாடு?
கிடைத்த உணவை கா கா என அழைத்து
பகிர்ந்து உண்ணும் காகங்களைப் போல் வாழ்
உன் கொள்கைகள் பல வானாலும்
மரக்கிளைகள்போல் மரத்ததோ:டு இணைந்து
பூக்களையும் கனிகளையும் ஈன்றெடு
பலருக்குப் பயன் தர.

To Buy or Sell your Home...

Recruiting New and Experienced Agent

call me for more info...

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife Today
Realty Ltd., Brokerage
Independently Owned And Operated

I ♥ Referrals



Ramanan Ramachandran
Broker/Owner
Cell: **416-670-6467**
E-Mail: agentram@gmail.com

Please note down my new address:
31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200

Proven Results... Go To
www.rramanan.com

Dr. Santhakumar & Associates

FAMILY MEDICAL CLINIC / குடும்ப வைத்திய நிலையம்

KEY TO ALL YOUR MEDICAL NEEDS IN MISSISSAUGA & BRAMPTON

Dr. V. Santhakumar (MBBS. CCFP) Family Physician
Dr. சாந்தகுமார் குடும்ப வைத்தியர்

Dr. C. Mahendira (MBBS. CCFP) Family Physician
Dr. மகேந்திரா குடும்ப வைத்தியர்

Sumathy Santhakumar BSc. (PT) Physiotherapist
சுமதி சாந்தகுமார் இயன் மருத்துவ நிபுணர்

Dr. Yarlni Karunanithi (O.D.) Optometrist
Dr. யாழினி கருணாநிதி கண் வைத்தியர்

தமிழ் பேசும் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.

Convenient Location - Centre City Plaza
Hwy 10/Dundas
Pharmacy next door with services in tamil
மருந்தகம் - தமிழில் சேவைகள்

குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் முதியோர் வைத்தியம், உடல், உளநல பராமரிப்பு

OPEN MONDAY TO SATURDAY

Mississauga

3085 Hurontario Street
Suite 204 A & B
Mississauga, ON. L5A 4E4
Tel : (905) 273 6895
(905) 273 7946 (Physio)

By Appointment Only



மு. சின்னத்தம்பி

மனிதனின் உடல் ஒரு மருத்துவச்சாலையா?

தலைவலிக்கோர் மாத்திரை
தடிமனுக்கோர் மாத்திரை
தவறுதலாக உற்கொண்டால்
தர்மலோகத்துக்கு யாத்திரை

என்ன கவிதை நகைச்சுவையாக இருக்கிறதா? அதில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது என்பது பல மருந்துகள் எடுப்பவர்களுக்குத் தெரியவேண்டும்.. மாத்திரையை தவறுதலாக எடுத்தால் அதன் விளைவு அபாயமானது. மருந்தை உட்கொள்வதை பரிபாலனம் செய்வது என்பது இலேசு பட்ட விடையமில்லை. வயது வந்தோருக்கு மறதி அதிகம். மருந்தை நேரத்துக்கு எடுத்தோமா என்பது நினைவிலிருக்காது. மாற்றி எடுத்துவிட்டோமா. ஒரு மாத்திரைக்கு பதிலாக எதோ சிந்தனையில் இரண்டு மாத்திரைகள் எடுத்துவிட்டோமா என்ற யோசனை. அதுமட்டுமல்ல எந்த மாத்திரையை சாப்பாட்டுக்குப் பின்னர் எடுக்க வேண்டும், எத்தனை மாத்திரைகள் எடுக்க வேண்டும், எத்தனை மணிக்கு என்ன நேர இடைவெளியில் எடுக்க வேண்டும். எந்த உணவுகளைச் சாப்பிடக் கூடாது, இப்படி எத்தனையோ விஷயங்களை மனதில் பதிய வைக்க வேண்டு அல்லது குறித்து வைக்க வேண்டும். இதற்காக மருந்துகளைப் போட்டு வைப்பதற்கு சிறு பெட்டியொன்றை திங்கள் முதல் ஞாயிறு வரை மருந்துகள் ஒழுங்காக வைக்க மருந்து விற்கும் இடத்தில் கொடுப்பார்கள். மருந்து எடுக்க முன்னர் சரியான மருந்தையை எடுக்கிறோமா என்று அவதானிப்பது அவசியம். மருந்துகளை சிறுவர்களின் பார்வைக்கும் அவர்களின் கைக்கெட்டும் தூரத்திலும் வைக்கக் கூடாது. சிலசமையங்களில் மாத்திரைகளில் நிறம் ஒரே நிறமாகவும், ஒரே அளவாகவும் இருக்கும். முதியோர்களுக்கு அவர்களது பிள்ளைகள் சரியான மருந்தை சரியான நேரம் எடுக்க உதவவேண்டும். நினைவு படுத்தவேண்டும்.

கனடாவில் மருந்தகளின் விலை அதிகம். 65 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு மருந்து இலவசம். ஆனால் மருந்து பரிந்துறைபணமாக டொலர் 100 ஒரு வருடத்துக்கு கொடுத்தாக வேண்டும். அதில் இருந்து விதிவிலக்கு பெற விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது வருடாந்த வரி படிவத்தை இணைத்து வருமானம் எவ்வளவு என்பதை விளக்கி விண்ணபிக்க வேண்டும். அதோடு மருந்து வாங்க வேலை செய்யும் இடத்தில் காப்புறுதியுண்டு. பணம் கொடுத்து மருந்துகள் வாங்கினால் அதன் பற்றுச்சீட்டுகளை வைத்திருக்கவேண்டும். காரணம் வருட முடிவில் வரிக்கு விண்ணப்பிக்கும் போது மருந்து செலவைகாட்டினால் செலவு செய்த பணத்தின் ஒரு பகுதி கிடைக்க வாய்ப்புண்டு.

முதியோர்கள் பெரும்பாலோர் . சர்க்கரை வியாதிக்கும் , இரத்த அழுத்தத்திற்கும், இரத்தத்தில் கொழுப்பு குறைவதற்கும் மருந்து எடுப்பார்கள். சர்க்கரை வியாதிக்கு மருந்தை எடுத்துவிட்டு மதுபானம் அருந்த கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. Antibiotics எடுக்கும் போது வைத்தியர் சொன்ன மருந்து எண்ணிக்கையை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் முற்றாக எடுத்து முடிக்கவேண்டும. வியாதி போய்விட்டது என்று அரைகுறையாக எடுக்காமல் விடக் கூடாது. Antibiotics எடுக்கும் போது கூடியளவு நீர் அருந்த வேண்டும், மதுபானம் அருந்தக்கூடாது.

தமது வாழ்நாளை நீடிக்க முதியோர்கள் பலவிதமான மருந்துகளை மருத்துவரின் ஆலோசனையின்பேரில் உட்கொள்கிறார்கள். அடிக்கடி மருத்துவரிடம் சென்று பரிசோதித்து மருந்தின் அளவை கூட்டவோ அல்லது குறைப்பது அவசியம். Thyroxin என்ற மருந்தின அளவு அவ்வாறு அடிக்கடி பரிபாலனம் செய்வது அவசியம். நீங்கள் எடுக்கும் மருந்து உங்களுககு தெரிந்தவருக்கு சரிப்பட்டு வராது. தாயகத்தில் வாழ்பவர்கள் பலர்களிடையே மருந்து பரிமாறல் வைத்தியரிடம் கேளாமல் நடப்பதுண்டு. இது ஆபத்தான செயல்பாடாகும். மருந்தினால் மனிதன் மட்டுமல்ல அதை தயாரிக்கும் ஸ்தாபனங்களும் பயனடைகின்றன. காலத்தோடு மருந்துகள் மாறுகின்றன. அதனால் வியாதிகள் வெகு விரைவாக குணமடையவும் ஆயுள் நீடிக்கவும் உதவுகிறது. புதுப் புது வியாதிகளுக்கு புதுப் புது கண்டுபிடிப்புகள். இவை மருந்துகளின் பாதிப்பினை குறைக்கும். சில மருந்துகள் ஆண்மைத்தனததை குறைக்கும். ஆனால் இன்னும் எயிட்ஸ்வியாதிக்கும், இரத்த புற்றுநோயுக்கும் முழுமையாக் தீர்க்க மருந்துகண்டுபிடிக்கப்படவில்லை. இவ்விரு வியாதிகளை விட மருந்துகள் கண்டு பிடிக்காத வியாதிகள் இருக்கத்தான் செய்கிறது. சத்திரசிகிச்சை மூலம் ஆயுளை சில காலம் நிடிக்கலாம்

மாத்திரைகள் இயற்கையில் உள்ள தாவரங்களிடம் இருந்து கிடைக்கும் இலை, காய் வேர் ,

மலா் , மரப்பட்டையில் இருந்தும் புல் பூண்டிலிருந்து செய்யப்படுகிறது. சர்க்கரை வியாதி அதிகமானவுடன் ஊசி மூலம் மருந்து ஏற்றப்படும். பதிவுரிமை பெற்ற மருத்துவர்கள் பரிந்துரைத்தால் மட்டுமே பல மருந்துகளை மருத்துவக் கடைகளில் வாங்கலாம். தலைவலி, வயிற்றுவலி போன்ற வியாதிகளுக்கு மருத்துவர்கள் பரிந்துரை தேவையில்லை.

சில தாவரங்கள் மருந்து தயாரிக்க பாவிக்கப்படும் போது மூலிகை எனப்பெயா் பெறுகிறது. இந்திய மருத்துவமுறைகளான சித்த வைத்தியம், ஆயுர் வேதமுறை, சீன மற்றும் தீபத்திய வைத்தியமுறைகளுக்கு மூலிகைககளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஹோமியோபதி வைத்தியம் அலோபதி வைத்தியத்தை விட நோயைக் குணப்படுத்த அதிககாலம் எடுக்கும். நோயின் காரணங்களை அறிந்து அதனை எதிர்க்கும் சக்தியை கொடுக்கிறது.

ஜெர்மனி நாட்டின் மருத்துவ புரட்சியாளா ஹானிமன் (1753-1843) என்பவரே ஹோமியோ பதியின் தந்தை. அவர்காலத்துக்கு பின்னா் கடைப்பிடித்த வைத்தியத்தை அலோபதி என்றனா்.

தொடர்ந்து மருந்து எடுப்பதால் மனிதனின் உடல் ஒரு மருத்துவசாலையாகி விடுகிறது. மூலிகைகளை உண்டு, நோய் நொடியின்றி வாழ்பவர்களும் உண்டு. இது இயற்கை வைத்தியத்ததோடு இணைந்தது. நாய், பூனை போன்ற மிருகங்கள் உடல் நலம் சரியில்லாவிடில் குறிப்பிட்ட புல் பூண்டினை உண்பதைக் காண்கிறோம்.

மருந்தை நம்பி வாழாத மனிதர்கள் மிகக் குறைவு. நீண்ட ஆயுள், மரபணு, உண்ணும் உணவு, வாழும் வாழ்க்கை முறை ஆகியவற்றில் தங்கியுள்ளது. அனலை தீவு மக்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். காரணம் கடும் உழைப்பாளிகள். சூழலின் பாதிப்பு அத்தீவில் குறைவு. முதலாம் உலக நாடுகளில் கனடாமக்களின் சராசரி வயது 80.1 ஆண்டுகள். மூன்றாம் உலகநாடுகளில் மொசம்பிக் நாட்டின் சராசரி வயது 40..3 ஆண்டுகளாகும். ஸ்பெயின் நாட்டு மக்களின் சராசரி வயது 81.02 ஆகும். உலகில் 100 வயதுக்கு மேற்பட்ட சராசரி வயது கூடிய மக்கள் வாழும் நாடு தைவானுக்கு அருகில் உள்ள (Okinawa) ஒக்கினாவ தீவாகும்.

மருந்துகள் ஆயுளை நீடிக்கிறது. தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கிறது. பொருளாதாரம் வளர உதவுகிறது. ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''.

மீனவர்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் கரைவலை

இதென்னடா பீல் முது தமிழர்சங்கம் முதுவேனில் அட்டைப்படத்தில் புதுமையான காட்சியை படமாக போட்டிருக்கிறார்கள் எனச் சிந்திக்கிறீர்களா? அதற்கு காரணங்கள் உண்டு. இம்முறை முதுவேனில் 2009 "ஒற்றுமையை" அடிப்படையாக வைத்து வெளிவருவதினால் இவ்வியற்கை காட்சியானது ஒற்றுமையையும் , சூழலையும், கடும் உழைப்பையும் பிரதிபிலிக்கிறது.

காலைப் பொழுதில் துயில் எழுந்து, கடற்கரையில் மீனவர்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து கடலைக் கண்காணிப்பர். கடலின் நீரோட்டம், காற்றின் போக்கு, வீசும் கடல் வாசனை ஆகியவற்றை அவதானித்துக் கொண்டு இருப்பா். கடலின் மேற்பரப்பில் நெத்தலி , சாளை, மத்தி, விளைமீன் ஆகிய சிறு மீன்களின் நடமாட்டத்தினால் கடலின் நிறம் மாறும். அதோடு கடற்பறவைகள் மொப்பம் பிடித்து மேலே வட்டமிடத் தொடங்கும். மீன்களின் வரத்து அதிகமானவுடன் படகில் சிலர் வலையோடு ஏறிக்கொள்வர். ஒரு முனையை கரையில் நிற்பவர்களிடம் கொடுத்து விட்டு வலையை கடலில் விரித்தவாறு, ஒரு நீள்வட்டவடிவமாக படகை செலுத்தி வலையின் மறு முனையை கடற்கரையில் சற்று தள்ளி நிற்கும் மற்றவர்களிடம் கொண்டுவந்து சேர்ப்பா். வலையின் இரு முனைகளும் நீண்ட கயிற்றினால் இணைக்கப்பட்டிருக்கும். சுமாா் ஒருபக்கத்தில 25 பேர் வீதம் ஒன்று சேர்ந்து தமது புஜபலத்தை பாவித்து அம்பா என்ற பாடலோடு வலையை ஒரே முகமாக இழுப்பர். கூட்டத்தின் தலைவரை "மண்டாடி" என்று அழைப்பா். கடற்கரை ஓரத்தில் படர்ந்திருக்கும் அடம்பன் கொடியும் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு. பிடிபடும் மீன்களை வலையை இழுத்தவர்களும் மண்டாடியுமாக பங்கு போட்டு மிகுதியை பொதுமக்களுக்கு விற்பனை செய்வார்கள். கரை வலையை "கரை மடி" என்றும் அழைப்பா. ஆங்கிலத்தில் Beach Seine என்பாா்கள். ஈழத்தின் கரையோர பகுதிகளில் இது கண்கொள்ளாக் காட்சி.

Time is precious and flashing by.
Put your hard earned money towards
your own home.

YOGA ARULNAMBY
B.Eng (Civil), A.M.I.E., A.M.ASCE.,
Sales Representative

416.727.6603

yoga@arulnamby.com
www.arulnamby.com



Century 21
Affiliate Realty Inc.,
208 - 80 Corporate Drive, Toronto,
Ontario, M1H 3G5
Tel : 416 290 1200 (24 Hrs)

தாய் வீடு

THAIVEEDU HOME & LIVING

வாசகர்களின் அறிவுக்கு விருந்தாக,
பல ஆராயச்சிக்கட்டுரைகளை
உள்ளடக்கிய மாதாந்தப் பத்திரிகை

'தாய் வீடு'

விளம்பரத் தொடர்புகளுக்கு:

416 646 3422

பொன் குலேந்திரன்

ஒரு நோக்கம் - பல கரங்கள்

இரு கைளில் உள்ள பத்து விரல்களும், ஒன்றையொன்று அளவில் வித்தியாசமாக இருப்பினும் என்று சேர்ந்து இயங்கினால்தான் ஒரு காரியத்தை சரிவரச் செய்து முடிக்கலாம். அவ்வாறே இரு கரங்களும், கால்களும், கண்களும், செவிகளும் ஒன்றுபட்டு இயங்கவேண்டும் ஒரு மனிதன் பூரணமாகவும் திறமையாகவும் செயல்பட.

ஒற்றுமையின்மையை சமூகத்தில் சில செயற்பாடுகளில் காணலாம். கருத்து வேற்றுமையால் ஒற்றுமை சிதைவடைகிறது. பதவி, பணம், புகழ், சுயநலம் காரணமாக ஒற்றுமை சிதைகிறது. சிறு தீவான இலங்கையில் மட்டும் 67 அரசியல் கட்சிகள். அதுவும் தமிழர்களிடையே திடீரென தலைமைப் பதவியை நோக்கமாகக் கொண்டு தோன்றும் கட்சிகள் இனத்துக்கே அவமானத்தைக் கொண்டு வருவது மட்டுமன்றி எதிரிகளுக்கு துணைபோகின்றன. இப்படித் தோன்றும் கட்சிகளுக்கு ஏதோ பெருபான்மையான மக்கள் தம்கருத்தை ஆதரிக்கிறார்கள் என்ற எண்ணம். அப்படி ஆதரவு இல்லை என்றவுடன் வன்முறையும் போலி குற்றச்சாட்டுகளும் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

வேற்றுமையிலும் ஒற்றுமை என்பதற்கு எடுத்தக்காட்டு கடலோரத்தில் மீனவர்கள் கரைவலை இழுக்கும் காட்சி. மீனவ குடும்பங்களுக்குள் பிணக்குகள் இருந்தாலும் அனைவரும் கரைவலை இழுக்கும் போது ஒன்று சேர்ந்து இழுக்கும் அருமையான காட்சி (அட்டைப்படத்தை பார்க்கவும்). பல கரங்கள் ஒன்று சேர்ந்து பல மீன்கள் வலையில் சிக்கவேண்டும் என்ற பொது நோக்குடன் செயல் படுகிறார்கள் மீனவக் குடும்பங்கள். இக்காட்சி ஒற்றுமைக்கு அத்தாட்சி. கரைவலை இழுக்கும் போது அதற்கு ஒரு "மண்டாடி" என்ற தலைவன் உண்டு. சுமார் 40 முதல் 60 பேர் கரைவலை இழுப்பது வழக்கம். அவன் கலைப்பு தீர அம்பா பாடலை ஆரம்பித்து வைக்க கரைவலை இழுப்பவர்கள் சேர்ந்து இராகத்தோடு பாடுவார்கள். இசையை மீட்பதிலும் ஒற்றுமையுண்டு. அதோடு களைப்பு போய் உற்சாகத்தைத் தூண்ட ஒன்றாக சேர்ந்து மரபு வழி வந்த அம்பா பாடல் பாடுவார்கள். இது வயல்களில் ஒன்றாகச் சேர்ந்து நாற்று நடும்போது பாடுவதைப்போன்றது. யார் அருகில் நின்று கயிரை இழுக்கிறார் என்பது பிரச்சனையில்லை. எவ்வளவு மீன்களைப் பிடிக்கமுடிகிறது என்பது தான் நோக்கு. அதே போல் தான் கோயில் தேர்திருவழாவின் போது தேரை ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து இழுப்பதும் ஒரு கண்கொள்ளாக் காட்சி. சில கோயில்களுக்குள் தாழ்ந்த சாதி மக்கள் வரக் கூடாது என்ற ஊர் சட்டம் அவர்களை ஒதுக்கிவைக்கிறது. இறைவனுக்கு சேவை செய்வதிலும் வேற்றுமை பிரதிபலிக்கிறது ஆனால் தம் இனத்தின் உரிமைக்காக போராடும் போது வேற்றுமையிலும் ஒற்றுமை தோன்றுகிறது.

காகங்களைப் போல் பகிர்ந்துண்டு வாழ் என்பர். காகத்தின் கூட்டில் உள்ள முட்டையை திருடச் சென்றால் காகம் கரைந்து மற்றைய காகங்களை உதவிக்கு அழைப்பது இயற்கையில் நாம் காணும் காட்சி. பல சினிமா காட்சிகளில் வீதி மத்தியில் ஒருவரை தாதாக்கள் அடித்து நொருக்கினால் சுற்ற நின்று வேடிக்கை பார்ப்பதை காட்சியாக காட்டுகிறார்கள். "எனக்கேன் இந்தவம்பு. சாட்சி சொல்ல வேண்டிவரும்" என்ற பயம் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து உதவிக்குப் போக தயங்குவார்கள்.

ஒரு கட்சி அல்லது இயக்கம் பிரியும் போது பிரிவினால் தமக்கு என்ன இலாபம் கிட்டும் என்பது தான் முக்கிய நோக்கம். அப்படி பிரிந்து போனால் திரும்பவும் புதிதாக தோன்றிய இயக்கத்துக்குள் பதவிக்காக பிரிவு ஏற்படும் என்பதை மனிதன் உணர்வதில்லை. தனிமையாக இருக்கும் நூலை இலகுவாக அறுத்துவிடலாம் ஆனால் பல நூல்களை ஒன்று சேர்த்து நூலாக்கினால் அறுப்பது கடினம் என்பது பலர் அறிந்ததே.

ஒரு கையில் உள்ள விரல்கள் ஐந்தும் ஒரேயளவானவையல்ல. அதே போல் தான் மனிதனது சிந்தனைகளும். ஆனால் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் குழுவென வரும் போது ஒரு பொருளை மேசையிலிருந்து தூக்குவதற்கு ஐந்து விரல்களும் தேவைபடுவது போல் சிந்தனைகளுக்குள் ஒற்றுமையவசியமாகிறது.

தேன் கூட்டினை பல தேனீக்கள் ஒன்று சேர்ந்து உருவாக்குகின்றன. பயனையும் பகிர்ந்து கொள்கின்றன. தேன் கூட்டின் மேல் கைவைத்து யாரவது தேனை எடுக்க பார்த்தால் தேனீக்கள் ஒன்று சேர்ந்து கொட்டும். சிங்கம் வேட்டையாடும் போது ஒற்றுமையாக வேட்டையாடுகிறது. இந்த ஒற்றமையை பல மிருகங்களிலும் பறவைகளிலும் காணலாம். இயற்கையிலிருந்தாவது மனிதன் ஒற்றுமையின் இரகசியத்தை கற்க வேண்டும்.

பௌதிகத்தில் ஒரு தனி விசையால் அசைக்க முடியாததை பல விசைகளை ஒன்றாக பிரயோகித்து அசைக்க முடியும் என்பது விதி. அதுவும் ஒரே திசையில் விசைகள் இயங்கவேண்டும். எதிர் திசையில் விசைகள் இயங்கினால் பொருள் அசைவது கடினம். அதே போல் கருத்துக்கள் வேறுபட்டால் நோக்கினை அடைவது கடினம்.

பிறருடைய ஒற்றுமையை சிதைத்து பயன்பெறுவதற்கு சிலர் பிரிவை அடிப்படையாக வைத்து திட்டம் வகுப்பர். சமூகத்தில் பிரிவினியை புகுத்தி பரிபாலனம் செய்வதை கடைபிடித்தது பிரித்தானிய ஆட்சி. இதை நாம் இலங்கை அரசியலிலும் காணக் கூடியதாகயிருக்கிறது. பணத்தைக் கொடுத்தோ, அல்லது பதவி, சலுகைகளை கொடுத்தோ பிரிவைத் தூண்டிவிடுவர். சிந்திக்க தெரியாதவர்கள் அவ்வலைக்குள் சிக்கி மீளமுடியாது தவிப்பர். மதம், சாதி வேற்றுமை, மொழி, மாகாண வேற்றுமை ஆகியவை ஒற்றுமைக்கு எதிரிகள். இந்தியாவில் ஏற்படும் சாதிப் போர் இதற்கு எடுத்துக்காட்டு.

சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களை பற்றி நாம் அடிக்கடி பெருமையாக பேசுவோம். அதே சமயம் வெளியிலிருந்து வந்த முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமிக்க இவர்களிடையே ஒற்றுமையில்லாமையே காரணம். போர்த்துகேயர், ஒல்லாந்தர் , பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்யவதற்கு உள்நாட்டு மக்களின் ஒற்றுமையின்மையே முக்கிய காரணம்.

நதிகள் எல்லாம் கடலை நோக்கி செல்கின்றன. அது இயற்கையின் படைப்பு. அதில் ஓடும் நீரை பகிர்ந்து கொள்வதற்கு காவேரி நதிப் பிரச்சனைபோல் மாநிலங்களுக்கிடையே போட்டி. அதே போல் மாநிலங்களுக்கு கிடையே நான் பெரிது நீ சிறிது என்ற பாகுபாடு. பிரிவினையை உருவாக்குகிறது. ஒரு காலத்தின் யாழ்குடாநாட்டில் வாழ்ந்தவர்கள் கல்விஅறிவில் தம்மை வென்றவர் இல்லை என்ற மனப்பான்மையால் மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா . மன்னார் மலையகப் பகுதிகளில வாழ்ந்தவர்களை வேற்றுமையாக நடத்தினர். காலப்போக்கில் அப்பகுதிகளுக்கு புலம் பெயரும் நிலமை ஏற்பட்ட போது இந்த வேற்றுமை படிப்படியாக மறைந்துவிட்டது. இனத்தின் உரிமைகளை போராடி பெற ஊர் வித்தியாசம் பாராது செயல்பட வேண்டி நிலமை வந்தது. ஆனால் சுயநலத்திற்காக சில புல்லுருவிகள் மாநில வேற்றுமை என்ற விதையை விதைத்துவிட்டனர். அதனால் நமது நோக்கத்தை இலகுவில் அடைய தடைகள் தோன்றிவிட்டது.

இராக், ஆப்கானிஸ்தான் போரின் போது அமெரிக்கா தனித்துப் போராடத் தயங்கியது. அது பயம் காரணத்தால் அல்ல. முழுப்பழியும் தன்மேல் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தால். மற்றைய நாடுகளின் துணையோடு சேர்ந்து போராடியது, அதற்கு காரணம் எதிர்த்து போராடும் பயங்கரவாதம், பிற நாடுகளையும் பாதிக்கலாம் என்பதற்காக. அப்படி பாதிப்பு ஏற்படும் நேரத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து கைகொடுக்க வேண்டும் என்பதேயாம்.

மாறுபட்ட அரசியல் கொள்கைகள் இருந்தாலும் தற்போது 192 நாடுகளைக் கொண்ட ஐக்கியநாடுகள் சபை 1945ல் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் உருவாக்கப்பட்டது. அச்சபையிலும் உள்ளுக்குள் வேற்றுமைகள் நிலவத்தான் செய்கிறது. இச்சபையில் ஆங்கிலம், பிரென்ச் , அரபிக் , ஸ்பானிய மொழி, சீன மொழி, ரஷ்ய மொழி பிராதான மொழிகளாக நிலவுகிறது. அதைத் தொடர்ந்து உலகின் சில பகுதிகளில் ஐரோப்பிய யூனியன் , அரெப் லீக் , கொமென்வெல்த், சார்க் போன்ற குழுக்கள் தோன்றின. தங்களுக்கிடையேலான பிரச்சனைகளைப் பேசி தீர்த்துவைப்பது அக்குழுக்களின் நோக்கமாகும். ஒற்றுமை சிதையாமல் இருக்க, பேசி பிரச்சனைகளுக்கு முடிவு காண்பது அவசியமாகிறது. கருத்துக்கள் மாறுபட்டால் பொதுவான கருத்தின் அடிப்படையில் தீர்வைக்காணலாம்.

புனித லூசியா வைத்திய நிலையம்

HURONTARIO & DUNDAS

டாக்டர் விக்ரர் ஜோன் பிகராடோ M.D., C.C.F.P.

DR. VICTOR J. FIGURADO M.D., C.C.F.P.

டாக்டர் சுந்தர் M.D., C.C.F.P.

DR. SUNDAR M.D., C.C.F.P.

புதிய நோயாளிகளை டாக்டர் சுந்தர் மட்டுமே ஏற்றுக் கொள்வார்

பீல் முதியோர் சங்கத்தின் வளர்ச்சிக்கு நல்வாழ்த்துக்கள்



St. Lucia's Medical Center

160 DUNDAS ST.EAST, UNIT #103
MISSISSAUGA, ON. L5A 1W4

Tel : 905.206.1966

Fax : 905.206.1635

ஓம் சக்தி ஓம்

மிஸிசாகா மாநகரில் DIXIE / BRITTANIA சந்திப்புக்கு அருகாமையில் 1314 BRITTANI EAST இல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் அமைந்துள்ளது.

தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம்	பூஜை நேரம்
தினசரி	தினசரி
காலை 07:00 - 01:00	காலை 07:15
மாலை 06:00 - 09:00	காலை 08:30
	பகல் 12:00
	மாலை 06:00
	இரவு 09:00
	செவ்வாய் & வெள்ளி
	மாலை 07:30

விசேட நாட்களில் நேரங்கள் மாற்றி அமைக்கப்படும்

சகல சமயக்கிரியைகளையும் வேதாகம முறைப்படி செய்து கொள்ளவும் சோதிட ஆலோசனை விளக்கங்களுக்கும்

அம்பாள் நிலையம்
சுவாமி சோமேஸ்வரக் குருக்கள்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

1314 Brittania Road East, Mississauga, ON. Canada
Tel: **(905) 795 8389 - (905) 795 8542**

www.ambaltemple.org

மிசிசாகா பிரம்ரன் எற்றோபிக்கோ மக்கள் இதுவரை கண்டிராத மிகப் பிரம்மாண்டமான காட்சியறையுடன்
அக்ஸ்யாஸ் பஷன்

இது ஒரு பட்டுப்பூங்கா

2009க்கான புதிய டிசைன் சேலைகள்
புதிய டிசைன் கூறை சேலைகள்
பேன்சி சேலைகள்
பெண்களுக்கான புதிய பஞ்சாபிகள்
சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைகள்
பேன்சி நகைகள்
கைக்கடிகாரம்
அன்பளிப்புப் பொருட்கள்
பரத நாட்டிய பொருட்கள்
இன்னும் பல . . .

சாறி பிளவுஸ் உடனுக்குடன் தைத்துக் கொடுக்கப்படும்

தினம் தினம் புத்தம் புதிய டிசைனில்

905.306.7052

93 Dundas St. East, #3
Mississauga, ON. L5A 1W7

கந்தர் சிவநாதன்

மகாவம்சம் தருவிய தமிழ் ஈழம்

இலங்கையை ஆண்ட தமிழ் அரசர்களுள் சிவபக்தனான திராவிட மன்னன் இராவணன் தமிழர்களினால் இன்றும் போற்றப்படும் மிகச் சிறந்த பேரரசனாகும். இராவணன் இந்தியாவிலுள்ள சில பிரதேசங்களையும் தனது ஆட்சிக்குள் வைத்திருந்தான். இராவணன் , திருகொணமலையிலும், சிகிரியாவிலும் அரசமாளிகைகளை அமைத்து தனது ஆட்சியைச் செலுத்தினான். கிமு 2254ம் ஆண்டு தொடக்கம் கிமு கி.மு 2254ம் ஆண்டுவரை 37 ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் இலங்கையை இராவணன் ஆண்டான் என இராவணக் கதைகளில் காணப்படுகிறது. பண்டாரவளை வெள்ளவாய பாதையில் உள்ள லக்கல என்ற இடத்தில் இருந்து ஆட்சிபுரிந்தான் என்கிறது இராவணனன் கதைகள்.

இக்கதைகளிலிருந்து வாழ்க்கை நெறிகளைக் கொண்ட பண்பாடான சமூக அமைப்புடைய தமிழ் மக்கள் சீரும் சிறப்புடனும், 3.000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என அறியக்கிடக்கிறது. பேரரசன் இராவணன் காலத்தில், இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளும் கற்பிட்டியினால் இணைக்கப் பட்டுள்ளது. இவ்விணைப்பு, கடல் நீர்மட்டத் திற்கு மேலிருந்ததாகவும் அதனூடாக இருநாடுகளிற் கிடையில் மக்கள் போக்கு வரத்து இருந்ததாகவும் அறியக் கிடக்கிறது.

இராவணன் காலத்திற்கு முன் இலங்கையில் காணப்பட்ட ஐந்து துறை முகங்களில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்துள்ளன. இரு நாட்டிலிருந்தும் மக்கள் வணிகம் செய்வதற்காக இத்துறை முகங்களைப் பாவித்தனர். அத்துடன் இக்கோயில்கள் சீரும் சிறப்புடனும் பேணிப் பாதுகாக்கப் பட்டுள்ளன எனப் பேராசிரியர் போல் .ஈ. பீரிஸ் தனது ஆய்வில் கூறியுள்ளார். புத்தம் வருமுன், சைவமத அம்சங்களை உள்ளடக்கிய நிறுவன மயப்படுத்தப்படாத வழிபாட்டு நெறிகளே மேலோங்கி காணப்பட்டன. பௌத்தம் கிமு மூன்றாம் ஆண்டளவில் இலங்கை முழுவதிலும் பரப்பப்பட்டது.

பௌத்த மதம் இலங்கையில் காலூன்றிய காலம் சைவசமயியான நாகமன்னன் தேவநம்பிய தீசன் கிமு 244 207 காலமாகும். அவனுடைய ஆட்சிக்குட்பட்ட குடிகள் சிவநெறியை மூலமாகக் கொண்ட தமிழ் மொழியைப் பேசும் நாகர்கள் ஆகும்.

ஆகவே ஈழத்தின் ஆதி வாசிகள் தமிழர்கள். ஈழம் சிவநெறியைக் கொண்ட தமிழ்பேசும் தமிழரின் தாயகம் என்பதை எவரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.

பாளி மொழியில் எழுதப்பட்ட பௌத்தமதத்தைப் படித்த தமிழ் பிக்குகள், இலங்கையில் புத்த மதத்தைப் பரப்பினர். தங்கள் சமயச் பொழிவுகளில், மக்கள் பேசிய எலு மொழியுடன் (ஆதித் தமிழ்) பாளி, சமற்கிருதச் சொற்களைச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. காலப்போக்கில், பாளிப் பிராக்கிருத மொழி, எலு மொழியுடன் கலந்து, சிங்கள மொழியாக விருத்தியடைந்துள்ளது.

சிங்கள மொழியே 10ஆம் நூற்றாண்டின் பின்பே தமிழ் வட்ட எழுத்தையும் , கிரந்த எழுத்தையும் கொண்டு சிங்கள எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டது என அறிஞர் கு.று. குணவர்த்தனா குறித்துள்ளார்.

கிபி 6ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இந்து சமயப் பாதிப்பு மேலோங்கிய சமூகப் பின்னணியில், மச்சபுராணம், பாகவதபுராணம் என்பவற்றின் அடிப்படையில் புத்தரை வி\ணுவின் அவதாரமென மகாயனம் உள்வாங்கிக் கொண்டது. கிபி 7ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று இதை உறுதிப்படுத்துகிறது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்த பௌத்த கோவில்கள் அனைத்தும் விஷ்ணு ஆலயங்களாக மாற்றப்பட்டு விட்டன.

வடக்கு, கிழக்கு ஈழத்திலும் இம்மாற்றம் ஏற்பட்டதை வடமராட்சியிலுள்ள வல்லிபுரக்கோயில் பிரசித்தமான எடுத்துக்காட்டாகும். இவ்விஷ்ணுகோயில் ஆதிகாலத்தில் புத்தகோயிலாக இருந்துள்ளது என்பதற்குரிய சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கிபி 5ஆம் நூற்றாண்டில் ஐந்து தென்னிந்திய அரசர்களின் தொடர்ச்சியான 27 ஆண்டு ஆட்சி நிலவியது. இந்திய ஏகாதிபத்திய விரிவாக்கம் இலங்கை மக்களைப் பொறுத்தளவில் துன்பியலாகவே கருதப்பட்டது.

இந்த நிலையில் பௌத்த தத்துவம், மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது. கிபி 6ஆம் நூற்றாண்டில் உருவான இந்தச் சமூகப் பகை பலத்தின் பின்னணியில் இதே காலப்பகுதியில் 5ஆவது

தென்னிந்திய மன்னனைத் தோற்கடித்த தாதுசேனனின் மாமாவான மகானாம தேரோவால் மகாவம்சம் எழுதப்பட்டது.

இந்த முரண்பாட்டின் அடிப்படையிலிருந்துதான் இந்திய ஏகாதிபத்திய விரிவாக்கலில் இருந்து தென் இலங்கை தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முற்பட்டது. இந்நிலையில் உருவான தேரவாத, மகாயன பௌத்த பிரிவுகள் என்பன சிங்கள மொழியின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. அதே நேரம் தமிழ் மொழி மகாயன பௌத்தத்தின் ஊடகமாக கையாளப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கையில் 6ஆம் நுற்றாண்டில் உருவான இரு பௌத்தப் பிரிவுகளுக்குப் பின்னர், இலங்கையில் நிலப் பிரபுத்துவ வளர்ச்சியின் காலகட்டம் பெரும்பகுதியும், இந்து மதத்தால் உள்வாங்கப்பட்ட பௌத்தத்திற்கும், பௌத்த மதத்திற்கும் எதிரான போராட்டமாகவே அமைந்தது.

இந்து சமய மறுமலர்ச்சியாலும் தமிழ் மன்னர்களின் ஆட்சி விரிவாக்கங்களினாலும் புத்த சமயம் தென்னிலங்கையிலும் மறைந்துவிடும் என்ற பயம், தென் இலங்கையிலுள்ள பௌத்த சங்கத்தினரிடம் ஏற்பட்டது. இதன் காரணத்தால் பௌத்தர்கள் அதனின்று மனம் மாறாமல் இருப்பதற்கு அவர்கள் சில மிருக உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் உத்வேகங்களைக் கடைப் பிடித்தனர்.

அதிகாரபூர்வ மன்னர்களுடைய வரலாற்றோடு செவிவழி மரபாகப் பேணப்பட்டுவந்த கட்டுக்கதைகள் இணைக்கப்பட்டு, பௌத்த சமயப் பின்னணியில், புத்தர் முக்கிய கதாநாயகனாகச் செயற்படும் வகையில் மகாவம்சம் என்னும் புராணம் மகாநாமதேரர் என்ற பிக்குவால் கிபி ஆறாம் நூற்றாண்டளவில் பூரணப்படுத்தப்பட்டது. கட்டுக்கதைப் பண்பைக் கொண்ட பல வடிவங்களும் கதைகளும் இதில் பின்னிப் பிணைந்துள்ளன. சைவமதத்திலிருந்து பௌத்தமதத்திற்கு மாறியவர்களை மேன்மைப்படுத்துவதற்காக அவர்களுடன் புத்தர் நேர்த்தொடர்பு உள்ளதாக கதை புனையப்பட்டுள்ளது.

மகிந்த தேரரின் வருகைக்கு முற்பட்ட புராணம்

இந்த முற்பட்ட கால வரலாறு மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது பிரிவில் இங்குவாழ்ந்த இயக்கர், நாகர், ஆகிய பழுங்குடி மக்கள் பற்றியும் இயக்க நாக இராச்சியங்களுக்குப் புத்தபிரான் மும்முறை வந்தமை பற்றியும் கூறப்படுகிறது. (காலகதியில் இயக்கர், நாகர்களினால் உள்வாங்கப்பட்டுள்ளனர் என அறியப்பட்டுள்ளது.)

பௌத்தம் பரப்பப்படவிருந்த ஈழநாடு, புத்தபகவானாலே புனிதமாக்கப்பட்டது.

பௌத்தத்தைப் பாதுகாக்க ஆசிவதிக்கப்பட்டவர்களான மக்கள் இலங்கையில் குடியேறுவதற்காக புத்தரே இலங்கைக்கு வந்து பழங்குடிகள் பலரை அகற்றி அம்மக்களுக்கு வழிவகுத்தார் என்பதாகும். இரண்டாவது பிரிவில் ஈழத்தில் விஜயகுமாரன் கதைவடிவில், ஆரியர் குடியேற்றம் முதன்முதலாக இலங்கையில் ஏற்பட்டது என்பதாகும். மூன்றாவது பிரிவில் கட்டுக்கதை விஜய மன்னனுக்குப் பின் நாகர்களின் தேவநம்பியதீஸமன்னன் வரைப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மரபு வழியாகப் பேணப்பட்டு வந்த ஜாதகக் கதைகள், அதிகார பூர்வ மன்னர்களுடைய வரலாற்றோடு இணைக்கப் பட்டுள்ளன.

மகாவம்சத்தில் உள்ளடக்கப்பட்ட புரட்டுகளின் தொகுப்பு:

இலங்கை பௌத்த சிங்கள நாடாக இருக்க வேண்டும். அப்படியாய் இருப்பதற்குரிய கட்டுக் கதை மகா வம்சமாகும்.

புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வந்துள்ளார். புத்தருக்கும் மக்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பை ஏற்படுத்தினர். அ∴தாவது பௌத்தத்தைப் பாதுகாப்பவர்களாக, புத்தபெருமான், இலங்கையிலுள்ள பௌத்தர்களைத் தெரிவுசெய்து ஆசீர்வதித்துள்ளார்.

திராவிட பௌத்தத்தை வளர்க்கும் நாடாக புத்தபிரான் இலங்கையை ஆசீர்வதித்துள்ளார். பௌத்தர்கள் குடியேறுவதற்காக புத்தரே இலங்கை வந்து பழங்குடிகளை அகற்றினார். ஆ∴தாவது இயக்கர், நாகர், ஆகிய பெருங்குடி மக்கள், தங்களைத் தாங்களே ஆண்ட மக்கள், பொதுமக்களிடையே மதிப்பைப் பெற்ற ஐந்து ஈஸ்வரங்களை முக்கிய துறைமுகங்களில் அமைத்துள்ள மக்கள் - இவர்களை புத்தர் கதைகொண்டு பூரணமாக அழிக்கப்பட்டனர். பௌத்தத்தை வளர்ப்பதற்காக புத்தர் நிர்வாணம் அடைந்த நாளன்று, வங்கதேசத்து லாலா நாட்டைச் சார்ந்த சமூக விரோதி விஜயன் அவனுடன் 700 தோழர்களையும் புத்தர் ஆசீர்வதித்து இலங்கையை வந்தடையச் செய்தார். எனவே இலங்கை பௌத்தர்களுக்கு உரிய நாடு. பௌத்தர்கள் இராச பரம்பரையினர், ஆழும் வல்லமை உடையவர்கள். எனவே பௌத்தர்கள்தான் இலங்கையை

உங்கள் வீடு விலைப்படவில்லையா? என்னால் முடியும்

BRAMPTON **MISSISSAUGA**

FOR SALE

$349,000



Over 100
Power of Sale
Homes

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife / Future Realty Inc
Brokerage*
INDEPENDENTLY OWNED AND OPERATED
7 Eastvale Dr. Unit 205,
Markham, ON L3S 4N8

குமார் இராசேந்திரம்

Kumar Rajendram 2008 Gold Club Award Winner
Sales Representative

Dir: 416.602.2509
Bus: 416.264.0101

Mortgage ஒழுங்கும் துரிதமாக செய்துதரப்படும்

This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker.

INDIA • UAE • DUBAI • ABU DHABI • CANADA • SRI LANKA • SINGAPORE • MALAYSIA
ANJAPPAR
Best Compliments
From Anjappar Chettinad
Restaurant Group
VISIT US FOR AUTHENTIC SOUTH INDIAN, NORTH INDIAN AND HAKKA-STYLE CHINESE CUISINE WITH A SPICY TOUCH
Scarborough
3090 Eglinton Avenue East
(Eglinton & Markham)
416 • 265 • 2695
www.anjappartoronto.com
Brampton
1 Bartley Bull Pkwy
Unit 5, (Hwy 10 & Steeles)
905 • 450 • 7575
www.anjapparcanada.com
WE OFFER 10% DISCOUNT FOR SENIORS

RAJ NADARAJAH
MEGA
Financial Group
Thinking of Insurance!
We have solutions
NO Medical
NO Health Questions
NO Age Limits
RAJ NADARAJAH
(416) 666-1120
OR Any Mega Agent

imagine create print promote

Faster than ever service...
order online and pickup in 1 hour*

www.printfast.ca

Full Service:
Design/Layout
Printing - Digital/ Offset/ Wide format
Warehousing/Distribution
Publishing - News paper/ Magazine/ Book/ Web
Promotion - Ad mails/ Giveaways/ Trade shows

* Certain items only. conditions may apply.
visit our website or call customer service
for more details.

அரங்கேற்ற மலர்கள்
விழா மலர்கள்
நினைவு மலர்கள்
திருமண அழைப்பிதழ்கள்
பெட்டிகள்
பைகள்
வண்ணப் படங்கள்
இறுவட்டுகள்
பதாகைகள்

வர்த்தகத் தேவைக்கான
அனைத்து
அச்சமைப்பு மற்றும் வெளியீடு

Customer Service:
416 752 3278 / 1 866 310 3278
print@printfast.ca

fly above the competition

PRINT FAST.ca
IMAGINE DIGITALLY

Display Fast.com

4-2085 Lawrence Ave. E
Warden/Lawrence

ncp
Newcomer Centre of Peel

SETTLEMENT SERVICES
FOR THE ENTIRE FAMILY!

905 . 306 . 0577
www.ncpeel.ca

165 Dundas St. West Suite 200 Mississauga, ON L5B 2N6

- Language Instruction for Newcomers
- Enhanced Language Training
- Immigrant Settlement Adaptation Program
- The Resource Centre
- Host Youth Program
- Multicultural Settlement Education Partnership
- Global Business Centre
- Childcare for Clients and Students

Funded By: Citizenship and Immigration Canada / Citoyenneté et Immigration Canada Canada

IntelliChoice
MORTGAGE CORPORATION
Brokerage Lic#10511

VERICO
MORTGAGE BROKERS NETWORK

உங்களின் மோர்ட்கேஜ் தேவையைப்
பூர்த்தி செய்ய நீங்கள் காணும்
விளம்பரங்கள் எண்ணிலடங்காது!
அவற்றில் இதுவும் ஒன்று!

என்னைப் போல் அனைவரும்
உங்கள் தேவையைப் பூர்த்தி
செய்யக் கூடியவரே!

இருப்பினும் எம்முடைய சேவையின்
தரத்தினை அறிந்திட ஒரு முறை சந்திக்கலாமே!
சிவா போஜீ

Cuba Trip

African Lion Safari Trip

Health Seminar

Womens' Knitting Class

BBQ Sports

BBQ Event

Computer Training

Walk-A-Thon



வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக்குறைந்த செலவில்...

- ஆயுட்காப்புறுதி
  சேமிப்புடன் கூடியது, 10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்திமுடிக்கலாம்
- மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
  வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்படவரும் இணைந்து கொள்ளலாம்.
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
  2 மில்லியன் வரை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம்.
  அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம்
  20 வீத அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

digi Media Creations

சிறீதரன் துரைராஜா

Member of Million dollar round table

416.918.9771

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC

LiLand INSURANCE INC.

RBC

AJB TRAVELS

AIR CANADA · Lufthansa · SriLankan · FINNAIR · Alitalia · CATHAY PACIFIC · ETHIOPIAN AIRLINES · QATAR AIRWAYS · VARIG · Emirates · Asiana Airlines · ETIHAD

WHOLESALER - CONSOLIDATOR - TOUR OPERATOR

Scarborough
Joy
Praveen
Rajiv

880 Ellesmere Road, #211A
Scarborough, ON M1P 2W6

Tel : **(416) 412 0244**
Fax: (416) 412 0219
www.ajbtravels.com

AJB

IATA
ACTA
TICO

Mississauga
Tony (Thaya)
Gobi

3085 Hurontario St. #211A
Mississauga, ON L5A 4E4

Tel : **(905) 949 5600**
Fax: (905) 949 5400
www.ajbtravels.com



AJB TRAVELS & TOURS

ஆளவேண்டும். பௌத்தர்கள் அல்லாதோர் காட்டுமிராண்டி மிருகங்கள் ஆவார். அவர்களைக் கொன்றொழிக்கலாம் அல்லது அடிமைகளாக வைத்திருக்கலாம்.

பௌத்த பிக்குகள் உலகத்திலேயே மிகச்சிறந்த மாயக் கவர்ச்சியுடைய கட்டுக்கதை எழுதுபவர்களாக அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் இராமாயணம், மகாபாரதம் ஆகிய புராணக்கதைகள், பைபிள் கதைகள் ஆகியவற்றை உண்மையென நம்பி, மக்கள் அதற்கமைவாக சமயம், வாழ்க்கைமுறை ஆகியவற்றை அமைத்துள்ளனர். இதை நன்கறிந்த தேரர் அவைகளைப் போன்று மகாவம்சக் கதையையும் எழுதியுள்ளார். இப் புராணக்கதை மேற்கூறிய நோக்கங்களையும் உணர்வுகளையும் ஏற்படுத்திய அதேவேளையில் பின்வரும் உண்மைகளுக்கும் திடமான நம்பிக்கைகளுக்கும் முரண்பட்டதாக இருப்பதைச் சாதாரண மனிதனாலும் அறியக் கிடக்கிறது.

இந்நூல் எழுதப்பட்டபொழுது இலங்கையில் உயர் நாகரிகமடைந்த இயக்கர், நாகர் ஆகிய மக்கள் காணப்பட்டனர். இவைகளில் பல சிற்றரசர்கள், இராவணன் போன்ற பேரரசர்கள் இலங்கையை ஆண்டுள்ளனர் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிற்றரசன் துட்டகைமுனு எல்லாள மன்னனுடன் போர் செய்வதற்கு முன் 20 (இருபது) தமிழ் சிற்றரசர்களைத் தோற்கடித்துள்ளான் என மகாவம்சம் தெளிவாகக் கூறுகிறது. இதனிலிருந்து அக்காலப்பகுதியில் சைவ தமிழ் சிற்றரசர்களும், தமிழ் பௌத்த சிற்றரசர்களும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து ஆண்டுள்ளனர் என்பது வெள்ளிடமலையாகும். இப்புராணத்தில் ஏனைய இனத்தின் இறைமை மறைக்கப்பட்டதோடு இலங்கை, சிங்கள பௌத்தருக்கே சொந்தமானது என்ற குரலும் உரம்பெற்றுள்ளது. தென்னிந்தியா, இலங்கை ஆகிய தேசங்களிலுள்ள தமிழர்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாத முறையில் இலங்கைப் பௌத்த சமயத்தவரின் சாதி, சமயம், மொழி, பண்பாடு ஆகியன மகாவம்சத்தில் வரையப்பட்டுள்ளது. தமிழர்களிலிருந்து தாங்கள் வேறுபட்ட சாதி, ஆரிய வமிசத்தவர் என்பதை நிலைநாட்ட விசயன் கதை புனையப்பட்டுள்ளது. தற்கால பௌத்த சிங்கள ஆய்வினர்கள், இக்கதையில் எவ்வித உண்மையும் இல்லையென கூறியுள்ளனர்.

தென்னிந்தியாவிலிருந்து தமிழ் பிக்குகளினால் இலங்கைக்கு புத்தசமயம் கொண்டுவரப்பட்டதை மறைப்பதற்கு, புத்தரை இழிவுபடுத்தி பல கதைகள் புனைந்துள்ளனர். முக்கியமாக, புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வந்துள்ளார் இலங்கை புத்தரினால் புனிதமாக்கப்பட்டது பழங்குடிகளை அகற்றி பௌத்தர்கள் குடியேற வழி வகுத்துக் கொடுத்தார் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காக அங்குள்ள பௌத்தர்கள் ஆசீர்வதிக்கப் பட்டார்கள் ஆகிய இழிவான செயல்களைப் புத்தர் செய்துள்ளதாக மகாவம்சத்தில் கதைகள் புனையப்பட்டுள்ளன.

புத்தரின் வரலாற்றில் அவர் இலங்கைக்கு வந்ததாக வேறு ஏடுகளில் காணப்படவில்லை. மகிந்தன், சங்கமித்தை ஆகியோர் இலங்கைக்கு புத்த சமயத்தை கொண்டு வந்த கதைகள் மக்களின் உணர்வை ஏமாற்றுவனவாக அமைந்துள்ளன. தென்னிந்திய தமிழ் பிக்குகளினால் இலங்கைக்கு புத்தமதம் கொண்டுவரப்பட்டது என்பது மிகவும் சாத்தியமானதொன்றாகும். புத்த சமயத்தை வளர்த்த பல தமிழ் பிக்குகளின் சேவைகள் இலங்கைப் பௌத்தமத வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

இன்று தென்னிலங்கையில் வாழும் பௌத்த சிங்களவர் எனக்கூறுபவர்கள், முக்கியமாகத் தமிழர்களையும் மற்றும் பல இனத்தவர்களையும் உள்ளடக்கியதாகும். முக்கியமாகத் தமிழையும் பாளி, சமற்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிக் கலப்பினால் ஏற்பட்டது சிங்கள மொழியாகும். பௌத்த சமயம் தமிழ் பிக்குகளினால் இலங்கையில் பரப்பப்பட்டது என்பது தெளிவாகும்

எனவே பௌத்தரல்லாத இலங்கைத் தமிழர் வடக்கு, கிழக்கு, இலங்கையில் இருந்திருப்பதை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், அதை மகா வம்சம் நிலை நிறுத்துகிறது. கடந்த நானூறு ஆண்டு யாழப்பாண அரசு அதை உறுதிப்படுத்துகிறது.

பிச்சைக்காரனிற்கு ஒரு எசமான் இல்லை. அவனிற்கு சொந்தம் என்று சொல்வதற்கு ஏதும் இல்லை. பிச்சை போடுபவர்கள் எல்லோரும் ஏசமான்கள். பிச்சைக்காரனிற்கு சிநேகிதர்களுமில்லை, எதிரிகளுமில்லை. பௌத்த சிங்களவர் என்று சொல்லப்படுபவர்களும் பிச்சைக்காரன் நிலையை ஒத்ததாகும். பௌத்தம் அவர்களுடையது இல்லை. தென்னிந்திய தமிழ் பௌத்த பிக்குகளினால் இலங்கையில் புத்தசமயம் பரப்பப்பட்டுளளது சிங்கள மொழி அவர்களுடையது இல்லை தமிழுடன் பாளி, சமற்கிருதம், ஆங்கிலம் ஆகியன இணைக்கப்பட்ட ஒரு

மொழி சிங்கள மொழியாகும். சிங்கள மொழிக்குரிய எழுத்து அவர்களுடையது இல்லை தமிழ் பிரமி எழுத்திலிலிருந்து இவ்வெழுத்துக்கள் வடிவமைக்கப்பட்டன. சுருங்கக் கூறின் பிச்சைக்காரன் நிலையிலிருந்து, தமிழ் பௌத்தர்களை மேம்படுத்துவதற்தாக, நாகரிகமான ஒரு தனித்துவ நிலையைத் தமிழ் பௌத்தர்களுக்கு வழுங்குவதற்காக எழுதப்பட்டது மகாவம்சம்.

மேற்கூறியவற்றை மூடிமறைக்க எத்தனித்த போதும் இலங்கை தமிழ் மக்களுக்குரியது பல்லாயிரம் ஆண்டுகாலமாக தமிழர் வாழ்ந்த தேசம் தமிழ் மன்னர்கள் ஆதிகாலம் தொட்டு ஆண்ட தேசம் நாகரிகமான வாழ்வைத் தமிழர் கொண்டிருந்த தேசம் என்பதை மகாவம்சம் மறைமுகமாக உறுதிசெய்கிறது. எனவே சைவ தமிழர்களுக்குச் சொந்தமானது இலங்கை. அதே நேரத்தில் இன்றைய பௌத்த சிங்களவர்களுக்கும் இலங்கை சொந்தமானது. பல ஆயிரம் ஆண்டு கால ஆட்சிமுறையில் ஏற்பட்ட பெலப் போட்டியினாலும் சமயப் போட்டியினாலும் தமிழ்பேசும் மக்கள் வடக்கு, மேற்கு இலங்கையிலும் பௌத்த சிங்களவர் தென்னிலங்கையிலும் வாழ்ந்து வர நேர்ந்துள்ளது.

புத்தரையும் புத்த சமயத்தையும் சுய நலன்களுக்காக இழிவுபடுத்தி பயன்படுத்துகின்றனர். பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு புத்தரே இலங்கைக்கு வந்து அங்குள்ள மக்களை அகற்றினார். இன்றுள்ள சிங்களப் பௌத்தர்கள் கொடூரமான கொலைகளைச் செய்தும், கொத்தணிக் குணடுகளைப்போட்டு தமிழர்களைப் படுகொலை செய்தும் ஏனைய பல கொடூரமான மிருகச் செயல்களைச் செய்தும் இனப்படுகொலை செய்கின்றனர். தமிழர்களின் இனப்படுகொலையை மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். இவர்களைப்போல் உலகில் காட்டு மிறாண்டிப் பௌத்தர்கள் இருக்கமுடியாது.

முக்கியமான விடயங்களில் நாங்கள் அமைதியாக இருந்தால் எங்கள் வாழ்க்கை முடிவடைய ஆரம்பமாகும் - "லூதர் கிங் யூனியர்"

எங்கள் துணிகரமான செயற்பாடுகள், எங்கள் கனவு, திட்டம் ஆகியவற்றிற்கு நிகராகவும் ஈடுகொடுக்கத் தக்கதாகவும் இருக்கவேண்டும். -

மூலம்: பாஸ் பாஸ்கரன்.

ஹைக்கூ கவிதைகள்

என்ன வேண்டுதலோ
மொட்டை போட்டது மரம்
இலையுதிர்காலத்தில்

விதவைக் கோலத்தில்
வெண்ணிற ஆடையில் மரம்
தனித்து நின்றது பனிக்காலத்தில்

அன்பு என்ற சொல்லுக்கு
அர்த்தம் கேட்டு
மாணவனை அடித்தார் ஆசிரியர்.

இரவெல்லாம்
உன் நினைவு தான்
கொசுக்கள்.

பௌத்தத்தை போதிக்க வந்தான் மகிந்தன
பௌத்தத்தை சீரழிக்க வந்தார்
தற்போது மகிந்தா

மரண அறிவித்தல்
தவளையின்
அறிவித்தல்

பெண்தெய்வம்
பயந்து ஓடுகிறது எதிரே
போலிச்சாமி

வெடிகுண்டு சப்தம்
தலாட்டுகிறது
ஈழக் குழந்தைகளை

பார்த்தேன் என் ஏடை
பார்த்ததும் கனமாச்சு
என் மனசு

பெண்பார்க்க வந்தனர்
நாய்குரைத்தது
திருடர்கள் வருவதாய்.

தொலைந்து விட்டது
மனிதம்
பௌத்த இலங்கையில்

வயலுக்கு உரமிட்டது
புல்மேயந்த
ஆடு

ஆட்டம் போட்டவர்கள்
அமைதியாக உறங்குகிறார்கள்
கல்லறைகளில்

அழகுக்கு ஆணா பெண்ணா?
அழகிய தோகையுடன்

NEW KAVERI SUPERMARKET

SRILANKAN & INDIAN GROCERIES

Operated by Rama Grocers Inc.

Fruits



Vegetables



Groceries

Fish & Meat

Operated by Rama Caters Inc.

New Kaveri® Dosa Corner

நியூ காவேரி தோசா கோனர்

Srilankan & South Indian Restaurant

21 Dundas Street East, Mississagua

905-281-3332

29 Dunas Street East,
Mississauga, Ontario
L5A 1V9, Canada

(905) 277-5861

AUTO INSURANCE

We offer excellent rates and quality services.
Check and compare our prices

Excellent rates for all drivers with
1) Accidents, Tickets
2) NSF
3) Impaired Driving Prior Suspension
4) No Insurance (New Drivers)
5) Commercial Van and Trucks



புதிய வாகன சாரதிகள்
விபத்தில் ரிக்கற் பெற்ற சாரதிகள்
முன்பு காப்புறுதி இல்லாத சாரதிகள்
யாவருக்கும் சிறந்த கட்டணத்தில்
வாகன காப்புறுதி வழங்கப்படும். அத்துடன்
வீடுகளுக்கான (Home Insurance)
வியாபார நிறுவனங்களுக்கான
(Business Insurance) காப்புறுதி
வழங்கப்படும்

தொடர்புகளுக்கு கிறிஸ்ரி தம்பித்துரை

Christy Thambithurai
Registered Insurance Broker

Award Insurance Brokers Inc.
211 Consumers Road., Suite 203
Toronto, ON. M2J 4G8
Office Tel: (416) 321-8787
Fax: (416) 321-0648 Cell: (416) 268-8855

EZChoice
Credit Counselling and Financial Services

கடன் தொல்லை
என்ன செய்வதென்று தெரியவில்லையா?

- தொலைபேசி அழைப்பு தொல்லையை நிறுத்தலாம்.
- சகல கடன்களையும் ஒன்றிணைத்து ஒரு குறைந்த மாதாந்த கட்டணமாக மாற்றலாம்.
- சம்பளத்தில் இருந்து பணம் உருவுவதை நிறுத்தலாம்.
- தொடர்ந்து வீடு கார் போன்றவற்றை வைத்திருக்கலாம்.
- விரைவாக கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்.
- விரைவாக கிரடிட்டை சரி செய்து கொள்ளலாம்.

கடன் தொல்லைகளிலிருந்து
விடுபட்டு புதிய வாழ்வு திரும்ப ஓர்
அரிய சந்தர்ப்பம்

MORTGAGES
Residential / Commercial

- ✓ 1st, 2nd, 3rd Mortgages
- ✓ Refinancing / Equity take-out
- ✓ Line of Credit (Personal & Business)
- ✓ Loan (Personal & Business)

எம்மை அணுகுங்கள்

905-896-9991 / 416-896-9991

29 Dundas Street East ,Mississauga, ON L5A 1V9
email: info@ezchoicehome.com / wwwezchoicehome.com

திருமதி ரஜினி குலேந்திரன்

மரண பயம்

இக்கட்டுரையின் தலையங்கத்தைக் கண்டு பயப்படாதீர்கள். பிறப்பும் இறப்பும் இயற்கையாக நடக்கும் சம்பவங்கள். "பிறக்கும் போதும் அழுகின்றாய் இறக்கும் போதும் அழுகின்றாய்'' என்று ஒரு கவிஞன் சொன்னான். அதில் ஒரு சிறு திருத்தம். பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு குழந்தை பிறக்கும் போது குழந்தை சூழல் மாற்றத்தால் அழுதாலும், பெற்றோர்கள் ஆனந்தமடைகிறார்கள். பல காலம், பாசப் பிணைப்பால் வாழ்ந்தவர்கள் மரணம் ஏற்படும் போது வருந்தி அழுகிறார்கள்.

செய்தித்தாள்களில் தினமும் நாம் வாசித்து மனம் வருந்தச் செய்வது பெரும்பாலும் மரணச் செய்திகள். சில எதிர்பாராத விதமான சாவுகள். சிலர் திட்டமிட்ட சாவுகளுக்கு பலியாகிறார்கள். அதுவும் போர் என்று வந்தால் வெற்றிக்காக கட்டுப்பாடு இல்லாது, மனித உயிருக்கு மதிப்பில்லாது மரணங்கள் ஏற்படுகிறது. மரணசம்பவங்களை சினிமாவிலும் தொலைக்காட்சியிலும் பார்க்கிறோம். நேரடியாகக் கூட சில சமயம் கண்டுள்ளோம். அவைற்றில் பல கொடூரமானவை. இறக்கும் தறுவாயில் இவர்கள் மனதில் என்ன தோன்றும்? மனநிலை எப்படி இருக்கும்? இனத்தின் உரிமைக்காக போராடும் வீரர்களுக்கு மரணபயமே கிடையாது. வீரத்துடனும் மகிழ்ச்சியோடும் மரணத்தை தழுவுகிறார்கள தற்கொலைப் போராளிகள். இதனால் மாவீரர்கள் என்று மதிக்கப்படுகிறார்கள். அந்த பக்குவ நிலையை எல்லோராலும் அடைய முடியாது. இனப்பற்றும், உரிமைப் பற்றும் அவர்களைச் சிறந்த மரணபயமற்ற மனிதர்களாக்கிறது. மரணபயம் தோன்றுவதற்கு மன நிலை முக்கிய காரணமாகும்.

உறுதியாக சாகப்போகிறோம் என்று அறிந்த சாதாரண மனிதர்களின் மனநிலையில் எதனை எதிர்கொண்டு இருப்பார்கள்?. குடும்பப் பாசத்தால் கட்டுப்பட்டவர்கள் குடும்பத்தைத் தவிக்க விட்டு போகிறோமே என்ற சிந்தனையால் தவிப்பார்கள். சொத்தை பிரிப்பதில் குடும்பத்துக்குள் பரிவினை ஏற்படப்போகிறது, உயில் எழுதி வைக்காமல் போகிறோமே என்று மனம் வருந்துவோருமுண்டு. வாழ்ந்த போது ஊருக்கு நல்லதைச் செய்யாமல் போகிறோமே, கோயிலுக்கு தர்மம் செய்யவில்லையே என்று நினப்பவர்களும் இருக்கிறார்கள. தனது வாழ்நாளில் தீய கர்மாக்கள் பலதைப் புரிந்துவிட்டு உலகைவிட்டு பிரியும் நேரத்தில் தாம் செய்த தவறுகளை நினைத்து கண்ணீர் விட்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு குண்டு வெடிப்பினால் ஏற்படும் மரணத்தின் போது மரணம்பயம் ஏற்பட நேரம் போதாது. அது சொற்ப, கண் இமைக்கும நேரத்துக்குள் ஏற்படும் மரணம். ஆனால் தம் செயல்களால் தொடாந்து மரணபயம் மனதை பீடித்துக்கொள்ளும். வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் உயிரை பாதுகாக்க சுற்றி இருக்கும் பாதுகாவலர்களே அதற்கு சான்று. அப்படி பாதுகாப்புயிருந்தும் மரணம் வரும்போது வந்தே தீரும். மனிதனுக்கு பிறக்கும் நேரமும் , இறக்கும் நேரமும் நிட்சயமாக சொல்ல முடியாது.

நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழந்தவர்கள் பலர், இரவு துாங்கச் சென்று தூக்கத்திலேயே மரணத்தைத் தழுவி காலையில் உயிருடன் எழும்பாதவர்கள் பலர் உண்டு. "இதுவெல்லோ" சாவு என்று பலர் பேசிக்கொள்வார்கள். அதில் மரணபயம் ஏற்பட நேரமில்லை. நித்திரையில் உயிர் பிரிந்து விடுகிறது.

ஒரு விமானத்தில் பயணம் செய்யும் போது ஒரு வித கவலையுமின்றி, விமானம் ஊர் போய் சேர்ந்ததும குடும்பத்தைச் சந்திக்கப் போகிறோம் என்ற சந்தோஷத்தில் பயணம் செய்தவர்களின் மனநிலை இருக்கிறது. விமானத்தில் தீபற்றிவிட்டது, அவசரமாக கிழே இறங்கப் போகிறோம் என்ற அறிவித்தல் வந்தவுடன் அமைதியாக இருந்த பயணிகள் மனநிலை மாறுகிறது. மரணபயம் பீடித்துக் கொள்கிறது. விமானம் நிலத்தை தொட்டவுடன், தீபற்றி எல்லோரும் இறக்கிறார்கள். இதனை ஆன்மீகத்தில் கூட்டுக் கர்மா என்பர். பயணம் செய்தவர்கள் எண்ணிக்கை 95 ஆக இருந்தாலும், இறந்தவர்கள் எண்ணிக்கை 120. காரணம் விமானம் மக்கள் நடமாடும் பகுதியில் விழுந்து தீபற்றியதால் மரணபயம் எதுவுமின்றி கிழே இருந்த 25 மனிதர்களும் திடீரென மரணத்தைக் குறுகிய காலத்தில் மரணபயமின்றி தழுவினார்கள்.

இதே போன்ற சம்பவம் தான் 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி நியூயோர்க் நகரில் இடம் பெற்று ஆப்கானிஸ்தான் , இராக் யுத்தத்தங்களுக்கு மூல காரணமாக இருந்தது. இந்த சம்பவத்தில் இரு விமானங்களில் கடத்தல் காரர்கள் இருப்பதை அறிந்த பயணிகள் விமானத்தை அவர்கள் நியூயோர்க் நகரில உள்ள உயர்ந்த வர்த்தக மையத்தோடு மோதப்போகிறார்கள் என்று அறிந்தவுடன் மரணபயத்துக்கு ஆளாகிறார்கள். அதே சமையம் அவ்விரு கட்டிடங்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு விமானம் தம் கட்டிடத்தோடு

மோதப் போகிறது என்பது விமானம் மோதும் மட்டும் தெரியாது. அதனால் அவர்களுக்கு மரணபயம் விமானம் மோதியபின்னரே ஏற்பட்டிருக்கும். பயத்தால் தம் உயிரைக் காப்பாற்ற பதறி அடித்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள். மரணபயம் பதட்டத்தை உருவாக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று.

இதே போன்ற சம்பவம் வன்னி போன்ற இடங்களில் தினமும் குண்டுத் தாக்கதலுக்கு ஆளாகும் தமிழ் மக்கள் மனநிலை எப்படியிருக்கும் என்பதை நினைத்து பார்க்கும் போது மரணபயத்தால் அவர்கள் மனநிலை பாதிப்படையக்கூடிய வாய்ப்பு அதிகம் என்பதை நாம் உணரலாம். மக்கள் பதறி அடித்துக் கொண்டு உயிரைக் காப்பாற்றி கொள்ள பல திசைகளில் சிதறி ஓடுகிறார்கள். அதே சமயம் குண்டு தாக்குதல்களை நடத்துபவர்களுக்கும் கட்டளையிடுபவர்களுக்கும் மரணபயம் உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்த நேரமும் விமானம் சுட்டு வீழ்த்தப்படலாம். அதிகார போதையில் மக்களை கொன்று குவிப்போருக்கு எவ்வளவு பாதுகாப்பு இருப்பினும் மரணபயம் உள்ளுக்குள் இருக்கத்தான் செய்யும். வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள். உதாரணத்துக்க இலங்கையில் பல மூத்த அரசியல் வாதிகள் சிதறி வெடித்து அடையாளம் காணமுடியாத அளவுக்கு ஏற்பட்ட மரண சம்பவங்களை நினைத்து தமக்கும் அதே நிலை ஏற்படலாம் எனறு பயந்து வாழ்கிறார்கள். காலம் வரும் போது மரணம் அவர்களை தழுவத்தான் செய்யும். தினை விதித்தவன் தினை அறுப்பான் வினை விதித்தவன் வினை அறுப்பான் என்பதை வரலாறு காட்டியுள்ளது. ராஜீவ் காந்தி மரணம் இதற்கு ஒரு உவமை. ஈது போன்ற ஒரு சம்பவம் ஓட்டப் பந்தையத்தை ஆரம்பித்து வைக்க நின்ற பெர்னாந்து பிள்ளை என்ற அமைச்சர் குண்டு வெடிப்பில் காலமானார். தனக்கு நடக்கப் போவதை அவர் முற்கூட்டியே தெரியாது. ஆனால் மனதுக்குள் தான் தன் அரசியல் எதிரிக்கு செய்து பாவ காரியங்கள் மரணபயத்தை தோற்றுவித்திருக்கும் ஆனால் வெளிகாட்டியிருக்கமாட்டார்..

சதாம் ஹுசெயின் என்ற இராக் தேசத்து சர்வாதிகாரி அதிகாரம் கையில் இருக்கும் போது பலரைக் கொன்று குவித்தான். போர் ஆரம்பித்து சிறைபடிக்கப்பட்ட போதும் கூட மரணத்தை நினைத்து அஞ்சவில்லை. தைரியமாக அதை எதிர் நோக்கினான். காரணம் தனக்கு மரணம் எப்போதும் ஏற்படலாம் என்று தெரியும். இது கட்டபொம்மனின் வீரச்சாவை தான் நினைவு படுத்துகிறது. அதே சமயம் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26 வயதுடைய டிமோதி மக்வீ (Timothy McVeigh) என்ற இளைஞன் இரு அரச கட்டிடங்களை ஒக்கிலனாமா மாநிலத்தில் குண்டு வைத்துத் தகர்த்தினான். அதில் 168 பேர் இறந்தனர், 800க்கு அதிகமானோர் படுகாயமடைந்தனர். 2001ம் ஆண்டு ஜுலை மாதம் அவனுக்கு மரணத்தண்டனை நிறைவேற்றபட்டது.. ஆறு வருடங்கள் அவனின் வழக்கு நடந்தது. அவனுக்குத் தெரியும் தான் மரணதண்டனையில் இருந்து தப்பமுடியாது என்று. ஆனால் அவனுக்கு மரணபயம் இருக்கவில்லை, காரணம் தான் நினைத்ததை சாதித்து விட்டேன் என்ற கர்வமும் பிடிவாதக் குணமும் அவனுக்கு பயத்தைக் கொடுக்கவில்லை. தைரியமாக மரணதை சந்தித்தான். விஷஊசி ஏற்றி அவனை மரணத்தை தழுவச்செய்தனர் அவன் மரணத்தை தழுவ 4 நிமிடங்கள் எடுத்தது. அந்த நேரத்தில் அவன் மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பது புரியாத புதிர், ஆனால் ஊசி ஏற்ற முன்னர் இறந்தவர்கள் குடும்பங்களிடம் மன்னிப்பு கோரினான். மரணத்தை சந்திக்க முன்னர் அவன் முகத்தில் எந்த சலனமும் இருக்கவில்லை.

முதியோர்களில் பலர் புற்று நோயால் மரணத்தை தழுவும் போது மரண பயத்துக்கு ஆளாகிறார்கள். வைத்தியர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் புற்று நோயால் பாதிப்டைந்தவர் இறந்து விடுவார் என்று சொன்னவுடன் பேசுவதையும் தொடர்புகளையும் தவிர்த்து தனிமையை நாடி வாழ விரும்புகிறார்கள் சிலர் தியானம் செய்வதை தஞ்சமைடைகிறார்கள். மனதுக்குள் பயம் இருப்பினும் தியானத்தின் மூலம் அமைதியை நாடுகிறார்கள். தன்னம்பிக்கை சிலரை உயிர் பிழைக்க வைக்கிறது அல்லது வாழ்நாட்களை நீடிக்கச் செய்கிறது. திடீரேன இருதைய தாக்குதலால் மரணத்தை தழுவுபவர்களுக்கு மரணபயம் ஏற்படும் கால இடைவெளி குறைவு. "இருதைய தாக்கம் எச்சமயமும் ஏற்படலாம், உடலை கவனித்துக் கொள்" என்று வைத்தியர் எச்சரிக்கை செய்தால், மரண பயம் பீடித்துக் கொள்கிறது. வாயுக் கோளாரினால் ஏற்படும் சாதாரண நெஞ்சு எரிசலும் மரணபயத்தை உருவாக்கும்.

சாஸ்திரத்தை நம்பி வாழ்பவர்கள் பலர். கிரக நிலை, தசாபுத்தி ஆகியவற்றை வைத்து மரணம் எப்போது ஏற்படும் என சொல்லும் சாஸ்திரிமார் தாமாகவே அவர்கள் மனதில் மரணபயத்தை உருவாக்கிறார்கள். நாடி சாஸ்திரம் சொல்பவர்களும் அப்படியே. சாஸ்திரி சொன்ன மரண காலம் கிட்டக் கிட்ட மனதில் பயம் அதிகரிக்கிறது. தேவையில்லாத சிந்தனைகள் அலை மோதுகிறது. அடுத்த பிறவி நல்ல பிறவியாக இருக்க வேண்டும் என தெய்வத்தை வேண்டத்தொடங்குகிறார்கள். மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. இவ்வுலகுக்கு நாம் வரும் போது எதையும் கொண்டு வரவில்லை. காலப்போக்கில் பாசத்தையும், செல்வத்தையும், ஆசைகளையும், அதிகாரத்தையும், தீய பழக்கங்களையும் எம்மோடு சேர்த்துக் கொள்கிறோம். மரணத்தை தழுவும் நேரம் கிடடும் போது தான் அவைற்றைப் பற்றிச் சிந்திக்க தொடங்கிறோம். போகும்

SaiLuxme Take-Out & Catering

Open 6 Days / Week - Daily 10:00 am to 10:00 pm (Except Monday)

DAILY FAST FOOD MENU
- String Hoppers available after 2:30 pm
- Rice and Curries - Veggie, Mutton, Chicken, Fish
- Fried Rice
- Bamboo Pittu
- Parrotta Rotti - round, square
- String Hopper Mixture
- Pittu Mixture
- Kothu Rotti
- Milk Hoppers

THURSDAY / FRIDAY SPECIAL
- Thosai, Idly

SATURDAY / SUNDAY SPECIAL
- Noodles
- Chillie Chicken
- Biriyani Rice

Large Catering Orders UnderTaken

Open TUESDAY to SUNDAY
MONDAY Close

இலங்கை இந்திய உணவுகளைத் தரமாகவும் சுவையாகவும் சூடாகவும் சுகாதார முறைப்படி குறித்த நேரத்தில் வழங்குவதே எங்கள் நோக்கம். திருமணம் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழா மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் நீங்கள் நாட வேண்டிய முதலிடம்.

சாயி லக்ஷ்மி ரேக் ஹவுஸ்

SAILUXME TAKE-OUT & CATERING
Unit 7A, 255 Dundas Street West
(Between Mavis and Hurantario on Dundas Street)
Mississauga, ON. L5B 3B2
Tel: **905.803.0300**

மிஸிசாகா பிராம்டன் மக்களுக்காக புதியதோர் ஆலயம்

அருள்மிகு

ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

தினசரி	
காலை	07:00 - 01:30
மாலை	05:00 - 09:30

பூஜை நேரம்

தினசரி	
காலை	07:30
காலை	09:30
மதியம்	12:00
மாலை	07:30
இரவு	09:30

விசேட நாட்களில் ஆலயம் முழு நேரமும் திறந்திருக்கும்

திருமணங்கள், கணபதி ஹோமம், கிரக சாந்தி மற்றும் பிதிர் தர்ப்பணம், திவசங்கள் என்பனவற்றை நிறைவேற்ற ஒழுங்கு செய்து தரப்படும்.

200 Advance Blvd
Unit #1 - 5
Brampton, ON. L6T 4V4

வெள்ளி - சனி - ஞாயிறு
7 மணியிலிருந்து 2 மணி வரை
திறந்திருக்கும்

TEL: (905) 458 9701
CELL: (416) 471 0255
FAX: (905) 456 0326

DR.(MRS) K.VASANTHAKUMAR
(Acupuncturist)

ACUPUNCTURE CLINIC
அக்கியுபங்சர் சிகிச்சை நிலையம்

பிரபல சீன வைத்தியமான அக்கியுபங்சர் வைத்தியத்தின் மூலம் தீராத பல நோய்கள் நீங்கப்பெற்ற நோயாளர்கள் பலர். உங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்களுக்கு தமிழில் உரையாடி சிகிச்சை பெறலாம். தொடர்புகளுக்கு டாக்டர் (திருமதி) க.வசந்தகுமாரை கீழ்க் காணப்படும் தொலைபேசி எண்களில் அழைத்து நீங்களும் பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Scarborough வில்
Monday & Wednesday
10:30 AM - 4:30 PM
Saturday
9:30 AM 3:30 PM

Mississauga வில்
Tuesday, Thursday & Friday
8:30 AM -12:30 PM
4:00 PM - 6:00 PM

4544 Sheppard Ave. East #277
Scarborough, Ont. M1S 1V2
Tel: 416.754.4024
(McCowan/Sheppard)

Centre City Health
250-3085 Hurontario Street
Mississauga,Ont. L5A 4E4
Cell: 416.826.7276
(Dundas/Hurontario)

தமிழ் மிரர்

TAMIL MIRROR

Mirror that reflects the Tamil Community

Web: www.thetamilmirror.com
E-Mail: Tamilmirror@gmail.com

416-697-0126

போது அவை எம்மோடு கூட வரப்போவதில்லை. மயானத்தினூடாக நடந்து போகும் போது அதில் உள்ள கல்லறைகளை பார்த்துச் சுடலை ஞானம் ஏற்படுகிறது. இந்து மதமும் பௌத்தமும் மறு பிறவிபற்றியும் செய்த கா்மாக்களை பற்றி எடுத்துச்சொல்கிறது. மறு பிறவியானது செய்த கா்மாக்களை பொறுத்தது என்கிறது. இதுவே மரணபயத்தை தோற்றுவிக்கிறது. அதோடு மரணம் ஏற்படும் சமயம் ஏற்படும் வலியை நினைத்து மரணபயம் ஏற்படுகிறது. விட்டுப் பிரிய விரும்பாத குடும்ப பாசமும் ஒரு காரணம். சௌகரியமான வாழ்வு வாழந்துவிட்டு அதை பிரிந்து போகிறோமே என்ற மனக் கவலை வேறு.

மரண பயமின்றி வாழ்வுக்கு உலக பற்றைத் துறக்க வேணடும். நமக்கென வாழாமல் பிறருக்கென வாழவேண்டு. எதையும் சந்திக்கும் தன்நம்பிக்கையும் மனத்தைரியமும் தேவை. அப்போது மரணபயம் ஓடி ஒளிந்துவிடும்.

கவிதை பொன்

எப்படி இருக்க வேண்டும்

மற்றவா்களின் அன்பை அபகரிப்பதில் திருடனாக இரு
உன் அறிவைப் பெருக்குவதில் பேராசைக்காரனாக இரு
முன்னேற முயற்சிப்பதில் பிடிவாதக்காரனாக இரு
கா்வம் கொள்வதில் கஞ்சனாய் இரு
எதிா்ப்பை வெல்வதில் முரடனாய் இரு
பிறருக்கு உதவுவதில் தயங்காமல் இரு

******

பள்ளியில் பாடத்தைக் கற்றுகொண்ட
பின்னா் பரீட்சை எழுதுகிறோம்
ஆனால் வாழக்கையில் பரீட்சைக்கு
பின்னரே பாடம் கற்கிறோம்.

தரிப்பிடத்தில் தரியாது செல்லும் பேரூந்து போல்
இகழ்வோரை ஒதுக்கி முன்னேறு!

ஆகம்பாவம் ஒரு பொல்லாத குதிரை
ஒரு முறையாவது தன் மேல் சவாரி
செய்யும் எஜமானை
கிழே தள்ளாமல் விடாது.

புத்திமதி விளக்கெண்ணெய் போன்றது.
அதைக்கொடுப்பது சுலபம்.
அதைக் குடிப்பது மிகவும் கடினம்

அன்னையர் அணியின் 2008ம் ஆண்டுக்கான அறிக்கை

பீல் முது தமிழ் சங்கத்தின் 600 க்கு மேற்பட்ட அங்கத்தினா்களில் பெரும்பாலோா் பெண்கள. மகளிரின் தேவைகளுக்கும் முன்னேற்றத்திற்குமாக அண்ணையா் அணி என்ற துணைக் குழுவை 2005ம் ஆண்டு நிறுவி திறமையாக செயல் படுத்தி பெருமையைத் தேடிக் கொண்டது.
பெண்களுக்கு உபயோகமான பல கருத்தரங்குகள், பயிற்சிபட்டறைகள் ஊடாக அங்கத்தினா்கள் பல நன்மைகளைப் பெற்றனா்.

2008ம் ஆண்டு, வைத்திய கலாநிதி திருமதி இராஜேஸ்வரி துரைராஜா, திருமதி பத்மினி ஆகியோா் தேகநல சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்தினார்கள். இக்கருத்தரங்குகளில் 60க்கு மேற்பட்ட பெண் அங்கத்தினா்கள் பங்குபற்றினா்.
2008ம் ஆண்டு இறுதியில் தையல் வகுப்புகள், கேக் அலங்கார வகுப்புகள் , நடாத்தப்பட்ட போது சில பெண் அங்கத்தினா்கள் பங்கு பற்றி பயன் பெற்றனா்.

அண்ணையா் அணி தோன்றிய காலம் தொட்டு சங்கத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் , வீடுகளில் உணவு தயாரித்து பங்குபற்றியவா்களுக்கு பரிமாறபட்டது (Pot Luck Lunch).

வருங்காலத்தில் மேலும் பல செயற்பாடுகளை அங்கத்தினா்களின் நன்மைக்காக அண்ணையா் அணி செய்வதற்கு உத்தேசித்துள்ளது. அதற்கான New Horizon நிதி உதவியை 2009 ஆண்டுக்கு சங்கம் பெற்றுள்ளது. பெண் அங்கத்தினாகள் ஒற்றுமையாக கருத்தரங்குகள், பயிற்சி பட்டைறைகளில் பங்குபற்றி பயனடையளாம்..

திருமதி ச நாகராஜா
அண்ணையா் அணி **(Mother's Front)**
19 02 - 2009

வரா கந்தையா

மனிதன் மகிழ்ச்சியாக இல்லையே ஏன்?

இறைவன் உலகப் பரப்பில் ஓர் அழகான பூங்காவனத்தை அமைத்தார். அதில் மனிதகுலத்தைப் படைத்தார். அவர்கள் மகிழ்ந்திருப்பதைப் பார்பதற்காக ஆனந்தநடனம் ஆடினார். அதற்காகவே உயிரினங்களில் உயர்ந்த படைப்பாகிய மனித இனத்தைப் படைத்தார். மனிதனுக்குப் பேர்அறிவாகிய பகுத்தறிவைக் கொடுத்து அவனிடமே தன்னை ஆனந்தமாக வைத்திருக்கும் பொறுப்பையும் கையளித்திருக்கிறார். மனிதா என்னைப் பார்இ என்னை மகிழ்வி நான் உன்னை மகிழ்விப்பேன் என்னும் தத்துவத்தை வேதத்தின்ஊடு புகட்டியும் இருக்கிறார். நானே இயற்கை. நானே எல்லாமாக இருக்கிறேன். நீ மகிழ்சியாக இருக்க வேண்டுமானால் இயற்கை நன்றாக சமநிலையில் இருத்தல் வேண்டும். ஆனால் இன்று இறைவனால் தோற்றுவிக்கப் பட்ட இந்தப் பூங்காவனம் குரங்கின்கைப் பூமாலையாகிவிட்டது. மனிதனிடம் முன்னிற்பது நான் என்ற மமதை, அகங்காரம், ஆணவம், போட்டி, பொறாமை போன்ற கர்மக் குணங்களாகும். இதனால் இன்று மனிதன் பசுமையான பூங்காவையும் அழித்துத், தன்னையும் அழித்துவிட்டு, உலகை மருத்துவ நிலையமாகவும், தன்னை நோயாளியாகவும் மாற்றி வருகிறான். இது மனிதன் தான் வேறு இயற்கை வேறு எனப் பிரித்துப் பார்த்ததன் விளைவேயாகும். மனிதன் ஆரம்பத்தில் இயற்கையை வழிபட்டான். பின் விக்கிரகங்களை வழிபட்டான். விக்கிரகங்கள் இயற்கைச் சூழலில் அமைந்திருந்தன. இன்று தாவரங்கள் அழிக்கப்பட்டு பெரும் பெரும் கட்டிடங்கள் போட்டிக்குப் போட்டியாக கட்டப்பட்டே கோவில்கள் அமைக்கப்படுகின்றன. இது இறைவனின் விருப்பத்திற்கு எதிரான இயற்கைச் சமநிலைக் குலைவேயாகும். இருந்தும் இதன் நோக்கம் என்னவென்று புரிந்தும் புரியாததுபோல் மனிதன் இருக்கிறான்.

இயற்கைச் சமநிலை மனிதனுள் உள்ள சமநிலையையும், புறச்சூழலில் உள்ள சமநிலையையும் ஒருங்கிணைத்துப் பார்ப்பதே ஆகும். பிரபஞ்சத்தில் அணுவில் இருந்து அண்டம்வரை சமநிலை பேணப்படுகிறது. மனிதனுள் எண்ணுக்கணக்கற்ற இரசாயன, பௌதீக, சக்தி மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் யாவும் சூழல் மாற்றங்களுடன் இணைந்தே நடைபெறுகின்றன. எதுவும் நிலையாக இருப்பதில்லை. உலகில் மாறாதது எது? என்று கேட்பீர்களானால் மாறுதல்கள் நிழ்வது ஒன்றுதான் மாறாதது எனறு விடை கிடைக்கும். சூழல் வேறு நாங்கள் வேறு என பிரித்துப்பார்க்க முடியாது. இயற்கை இறைவனின் படைப்பு. நாங்கள் இறைவனின் படைப்பு. இப்படைப்புக்களின் உள்ளேதான் இறைவனும் குடியிருக்கின்றார். சடப் பொருளும் சக்தியும் பிரிக்க முடியாதவை. சடப் பொருட்கள் சேர்வைகளாலும் சேர்வைகள் மூலக்கூறுகளினாலும் மூலக்கூறுகள் அணுக்களாலும் ஆனவை. அணுக்கள் புரோத்திரன், நியூத்திரன், இலத்திரன் ஆகிய உப அணுத் துணுக்கைகளைக் கொண்டுள்ளது. அணு உயிர்ப்புள்ளது. உயிர்ப்பொருட்கள் இந்த இரசயானச் சேர்வைகளால் ஆனவை. இச் சேர்வைகளின் ஒன்றிணைந்த அணுக்களின் சக்தியே உயிர்ப்பு சக்தியாகும். பிராணன் எனவும் அழைக்கப்படும். இதே சக்திதான் பிரபஞ்சத்தையும் இயக்குகிறது. அணுக்கள் ஒன்றை ஒன்று இனம் காணும். சேரும்போதும், பிரியும்போதும், சக்திப் பரிமாற்றம் நிகழும். ஓர் அணு ஓர் இடத்தில் இருப்பதில்லை. உதாரணமாக எனது உடலில் உள்ள காபன் அணு புறச் சுவாசத்தின் போது காபன்ஈர்ஒட்சயிட்டாக (Carbondioxide) சூழலுக்கு சென்று கொண்டே இருக்கிறது. இவ்வாறு பொருட்கள் எரியும் போதும் பெருமளவு காபன், காபன்ஈர்ஒட்சயிட்டாக சூழலை சென்றடையும். தாவரங்கள் ஒளித்தொகுப்பு முறையால் வளியில் உள்ள காபன்ஈர்ஒட்சயிட்டை பெருமளவு உள்ளெடுத்தே காபோயைதரேற்று (Carbohydrate) - மாப்பொருள்வெல்லம், புரதம,இ கொழுப்பு ஆகிய உணவைத் தொகுத்து உலகிற்கு வழங்குகிறது.

தாவரங்கள் இறைவனால் உலகிற்க்கு வழங்கப்பட்ட உணவுத் தொழிற்சாலையாகும். மனிதனால் ஒரு மணி தானியத்தை ஏனும் தயாரிக்க இயலாது. உணவில் உள்ள காபன் மற்றும் ஓர் விலங்கிற்கோ, மனிதனுக்கோ சென்றடையும். இது காபன் வட்டம் (Cabon cycle) எனப்படும். அடுத்து உயிர் வாழ்வதற்குத் தேவையானது பிராண வாயு ஒட்சிசன். இதையும் ஒளித்தொகுப்பின் போது தாவரமே வளங்குகிறது. சுவாசத்தின் போது உயிரினங்கள் வளியில் உள்ள ஒட்சிசனைப் பயன் படுத்தியே உணவை உடைத்து சக்தியைப் பெறுகின்றன. சுவாசத்தின் போது விலங்குகளால் ஒட்சிசன் உள்ளெடுக்கப்பட்டு காபன்ஈர்ஒட்சயட்டு வெளிவிடப்படும். ஒளித்தொகுப்பின்போது காபன்ஈர்ஒட்சயட்டு தாவரங்களால் உள் எடுக்கப்பட்டு ஒட்சிசன் வெளிவிடப்படும். இங்கு ஒட்சிசன் வட்டமும் (Oxygen cycle) அமைகிறது. அடுத்து உயிர் வாழ்வதற்கு முக்கியமாக அமைவது சுத்தமான நீர். இதிலும் தாவரத்தின் பங்கு முக்கியமாகின்றது. நிலத்தின் அடியில் உள்ள நீரை வேரால் உறிஞ்சி நீராவியாக நீர் வட்டச் சுற்றுக்குள் சேர்க்கின்றது. தாவரங்களே மழை வீழ்சியையும் நிர்ணயிக்கின்றன. காபன், ஒட்சிசன,இ நீர் வட்டங்களைப்

போல் கனிப் பொருள் வட்டம், சக்தி வட்டம் என்று பல இயற்கைச் சமநிலையில் ஓடிக் கொண்டே இருக்கும். இவ்வாறு பிறந்ததில் இருந்து இறக்கும் வரை உடலில் உள்ள அனைத்து அணுக்களும் இடம் மாறி மாறி வட்டங்களில் ஓடிக்கொண்டே இருக்கும். ஆனால் எல்லாம் ஓர் சமநிலையில் இருக்கும். இதுவே இயற்கைச் சமநிலையாகும். இவ்வாறான சமநிலைகளைப் பேணிப் பாதுகாத்து அவற்றைக் குலைக்காமல் பக்குவமாக வரப்போகும் சந்ததிக்குக் கையளித்து விட்டு வரும்படியே எங்கள் பிறவி படைக்கப்பட்டு பணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இயற்கைச் சமநிலையைக் குலைக்கும் தெய்வத் துரோகச் செயலில் மனிதன் ஈடுபட்டு வருகிறான்.

சூழல் பெரிதும் பாதிப்புறும் வகையில் மனிதனின் பாரதூரமான செயல்பாடுகளையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் பார்ப்போம். காட்டு மரங்களை அழித்து கன்னித்தரையில் விவசாயம் செய்தபின் தருசுநிலமாக்கிவிட்டு தொடர்ந்தும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் பூமியின் மேற்பரப்பில் வனாந்தரங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. காட்டு மரங்களை அழித்து கட்டிடங்கள் அமைக்கப்படுவதும், எரிபொருட்கள் அளவுக்கதிகமாக எரிக்கப்படுவதும் வளியில் அதிக அளவில் காபன்ஈரஒட்சயிட்டு, மெதேன் போன்ற பசுமை வாயுக்கள் தோன்றுவதனால் பூகோள வெப்பம் அதிகரிக்கின்றது. இதனால் துருவப் பனிக்கட்டி உருகிக் கடல்மட்டம் உயர்கின்றது. மரங்கள் பெருமளவில் குறையும் போது மழை வீழ்ச்சி குறையும் வறட்சி நிலவும். அத்துடன் வளியில் ஒட்சிசன் குறைந்து செல்லும் ஆபத்தால் உயிரினங்கள் இறப்பை எதிர் நோக்க நேரிடும். தொழில்சாலை மயப்படுத்தல், நச்சு இரசாயனக் கழிவுகளை நீரில், வளியில், தரையில் சேர்தல், சூழலை மாசுபடுத்துகின்ற செயலாகும். விவசாயத்தில் அளவுக்கதிகமாக கிருமி கொல்லிகள், செயற்கைப் பசளைகள் பாவித்தல் விவசாயியின் நண்பன் என அழைக்கப் படும் மண்புழு போன்ற பயன் மிகுந்த உயிரினங்கள் அழிக்கப்படுவதுடன், மண்ணின் வளமும் பெரிதும் குன்றும். குளிரூட்டிகளில் பெருமளவில் பிறயோன் (Freon) வாயுவின் பயன்பாடு ஓசோன் படையில் துவாரங்களை ஏற்படுத்தி நச்சுக்கதிர்களை உட்புக அனுமதிக்கின்றது. அளவுக்கு அதிகமான மின்சாரப் பயன்பாடும், விரயமும் மின் உற்பத்தியில் பயன் படுத்தப் படும் அணு உலையையும், எரிபொருளையும் அதிகரித்துள்ளது. இதனால் மனிதனைப் பாதிக்கக் கூடிய கதிர்வீச்சுக்கள் தோற்றிவிக்கப்படுகின்றன. இயற்கையில் இலகுவில் உக்காத பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற சேர்வைகள் பெருமளவில் உற்பத்தி செய்தல் மூலகங்களைப் பதுக்கிவைக்கும் செயல்பாடாகும். போர்ச்சூழலை உருவாக்கி நச்சு இரசாயனக் குண்டுகளை வீசி மனிதனை அழிக்கும் செயலிலும் மனிதன் ஈடுபட்டுள்ளான். அவன் மனிதனை அழிக்கவில்லை மாறாக இயற்கையை முற்றாக அழிக்கின்றான். இதனால் இறை பழிக்கு ஆளா கின்றான். இதன் விளைவுதான் பூகம்பம், நிலநடுக்கம், சுனாமி, புயல், காட்டுத்தீ, வெள்ளப்பெருக்கு. கொடிய நோய் பரவுதல், பட்டினி போன்ற ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளன.

இன்று இச் சூழல் மாற்றத்தால் ஏற்படுகின்ற பாதிப்புக் காரணிகளில் இருந்து விடுபட உலக நாடுகள் ஒன்றுகூடி பல செயல் திட்டங்களை வகுத்தும் நடைமுறைப் படுத்தியும் வருகின்றன. அவற்றுள் மின் சக்தி விரயத் தடுப்பு, எரி பொருள் பாவனைகுறைந்த வாகன உற்பத்தி, மரம் நாட்டு வைபவ நிகழ்வுகளும் அடக்கப்பட்டுள்ளன. அரசாங்கங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் தனி மனிதன் பகுத்தறிவால் செயல் படாதவரை எதுவும் சாத்தியமாகாது. தனி மனித சமாதானந்தான் உலக சமாதானத்திற்கு இட்டுச் செல்லும் (Individual peace leads to world peace). பரிணாமத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் மனிதனை அமைதி, சமாதானம், அன்பு, ஆன்மீகம் என்னும் உயரிய வாழ்கைத் தளத்திற்கு உந்தும் என ஆன்மீக வாதிகள் நம்புகிறார்கள். ஆன்மீகப் பாதை காலத்தின் தேவை என்பதை அந்த மகான்கள் புரிந்திருக்கிறார்கள். எமக்கு உணர்த்தியும் வருகிறார்கள்.

மனிதன் மகிழ்சியாக இல்லை. அவன் கொண்டு வந்த கர்மாக்கு ஏற்ப மனத்தோடுதான் வாழ்கிறான் என்பதற் குரிய சுவார்சியமான குட்டிக் கதையையும் கேளுங்கள். மனிதன் ஒருவன் மகிழ்ச்சியாக இல்லையே என மற்றய மனிதர்களிடம் கேட்டுப் பார்த்தான். அவர்கள் தங்கள் குறைகளைக் கொட்டித்தீர்தார்கள். விடை கிடைக்கவில்லை. பின்பு யோகிகள, ஞானிகள், சுவாமிகளைச் சென்று கேட்டான். அவர்கள் அதற்குரிய காரணத்தை அறியத்தான் தவமிருக்கிறோம் என்றார்கள். அங்கும் விடை கிடைக்கவில்லை. இறுதியில் அவன் இறைவனை நோக்கித் தவமிருந்தான். இறைவன் தோன்றினார். அவனைப் பார்த்து என்ன வரம் வேண்டும் என்றார். மனிதன் மகழ்ச்சியாக இல்லையெ ஏன்? ஏன்று வினாவினான். இறைவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று தனக்கு அருகில் இருத்தினார். அவனின் உருவம் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தெரியாதவாறு ஆக்கினார். ஆனால் பக்தர்கள் இறைவனிடம் கேட்பது அவனுக்குக் கேட்கும். அங்கு வந்த பக்தர்கள் பரீட்சையில் சித்தி அடைய

வேண்டும், வியாபாரம் லாபம் பெறவேண்டும், நோய் மாறவேண்டும், கலியாணம் நிறைவேற வேண்டும், வீடு வாங்க வேண்டும், எதிரி அழிய வேண்டும், மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளாக வேண்டும், (வாகனம் இழுத்துச் செல்பவன்), வாகனம் விபத்தில் மாட்டாது ஓட வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். இறைவன் கூறினார் மனிதர் கேட்பவற்றைத்தான் நான் கொடுக்கிறேன். இதுவரை எவரும் நான் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும், மற்றயவர்கள் மகிழ்சியாக இருக்க வேண்டும். உலகம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் எனக் கேட்கவில்லையே என்றார். மனிதன் புரிந்து கொண்டானா?

வாழவைப்போம் வாழ்வோம். சந்தோசம்.

கட்டுரை

பேராசிரியர் இ. பாலசுந்தரம்

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்...!

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்ந்த தமிழ் மன்னர்கள் பற்றியும் அம்மன்னர்கள் மக்களைப் பேணி நல்லாட்சி புரிந்த செய்திகள் பற்றியும் சங்கத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. தன்னாட்டு மக்களின் நலன் காக்கும் அரசர்களின் கடமையும் பொறுப்புணர்வும் அதன்பாற்படும். அதே பண்பாட்டில் வந்த தமிழ் முதியோர் தனக்கென வாழாது தம் பிள்ளைகள் - பேரப்பிள்ளைகள் என அவர்களுக்காகவே தமது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வுநிலையை என்னென்று வருணிப்பது? அந்த வாழ்வியலின் அர்த்தங்கள்தான் மற்றவர்களுக்குப் புரியுமா? நம் ஈழத்திரு நாட்டில் உண்ணாது உறங்காது பாடுபட்டுழைத்து, சொத்துக்கள் திரட்டிப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுக்கு முதிசம் சேர்த்தனர் நம் முதியோர். தாம் ஓய்வு பெற்றபின்னர் தம் உழைப்பில் அவர்கள் உல்லாசப் பணயம் செய்தார்களா? ஓய்வுக் காலத்தை இன்பமாகக் கழித்தார்களா? விருந்தினர் பலரை ஒன்றாக வீட்டுக்கு அழைத்து விருந்துபசாரஞ் செய்து ஏனையோரையும் மகிழ்வித்தார்களா? என்ற இன்னோரன்ன வினாக்களை எழுப்பும்போது நம் நாட்டில் முதியோர் பெற்ற சுகம் என்னவென்பது தேற்றம்.

கனடாவிலே முதியோர்களுக்கு கனேடிய அரசு பல்வகைச் சலுகைகளையும், நிதியுதவிகளையும் வழங்கி அவர்களைப் பேணிக் காப்பதில் அதீத அக்கறைகாட்டி வருகின்றமையைக் கனேடிய முதியோர்கள் நன்கு அறிவார்கள். தொடர்மாடி முதியோர் இல்லங்கள் அமைத்து, வதிவிட வசதிகளை அவர்களுக்குக் கொடுத்து, அமைதியானதும் சுதந்திரமானதுமான வாழ்க்கையை வழங்கியுள்ளது. முதியோர் தாம் பிரயாணம் செய்வதற்குத் தம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர் அல்லது நண்பர்கள் ஆகியோரை எதிர்பார்த்துக் காத்திருக்காமல், முன்னேற்பாடாகத் தாமே ஒழுங்குகள் செய்வதன் மூலம் அரச வாகனங்கள் அவர்களுக்குப் பயணம் செய்வதற்குக் கிடைக்கின்றன. முதியோர் பொழுதுபோக்கு நிலையங்கள், முதியோர் சேவை மன்றங்கள் என்பனவற்றில் அவர்கள் பொழுதுபோக்கு வசதிகளைச் செம்மையான முறையில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வாய்ப்புகளும் உள்ளன. அதேநேரத்தில் அரச மானியம் பெறும் முதியோர் மன்றங்கள் ஆங்கிலக் கல்வி, சுற்றுலாப் பயணம், கருத்தரங்குகள், மற்றும் உடல்நலம், முதியோருக்கான அரச மானியங்கள், கனேடிய அரசின் சட்டவிதிகள் என்பனபோன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய விசேட பட்டறைகள், கலை நிகழ்ச்சிகள் முதலான செயற்பாடுகளை முதியோர்களுக்காக நடத்திவருகின்றன.

இங்கு முதியோரைக் குறித்து எழும் எமது வினாக்கள் என்னவெனில் கனேடியத் தமிழ் முதியோர்களில் எத்தனைபேர் மேலே குறிப்பிட்ட அனைத்து வளங்களையும் வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்? அனைத்து வசதிகளையும், உரிமைகளையும் வழங்கும் கனேடிய அரசுக்கு விசுவாசமாக எல்லோரும் நடந்துகொள்கிறார்களா? அத்துடன் தமது நலத்திலும் கவனம்கொண்டு தனக்காக எத்தனை பேர் வாழ்கிறார்கள் என்பனவாகும்.

இந்நாட்டில் வாழும் பெரும்பாலான தமிழ் முதியோர்கள் (Canadian Citizens) கனேடியப் பிரஜைகளாவர். ஒரு நாட்டுக் குடிமக்கள் அந்நாட்டிற்கு விசுவாசமாகவும் அந்நாட்டிற்குத் தன்னாலான கடமைகளைச் செய்பவராகவும், நாட்டின் நலத்தில் அக்கறையும் பொறுப்புணர்வும் உடையவராகவும் செயற்பட வேண்டியது அவசியமாகும். முதியோர்கள் இக்கடமைகளை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதை அறிந்து செயற்பட வேண்டும். அதோடு கனேடிய

பிரஜைகளாக இருந்தால் மட்டும் போதாது கனடாவின் பிரதான மொழியான ஆங்கி மொழியினை எழுதா பேச வாசிக்க தெரிந்து வைத்திருப்புது அவசியம். முதலில் கனேடிய சட்டங்களுக்கு மதிப்பளித்து அச்சட்டங்கள் கூறும் நடைமுறைகளைப் பின்பற்றுவோராகச் செயற்படுதல் வரவேற்கத் தக்கது. கனடா தினம், கனேடிய தேசியக்கொடி என்பவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வோராண்டும் ஜுலை முதலாந் திகதி கனடா தினம் கொண்டாடப்படும்போது, அதுதொடர்பாக நடத்தப்படும் விழாக்கள், கருத்தரங்குகள் என்பனவற்றுக்குத் தவறாது சமூகம் அளிப்பதோடு, தாமும் அவற்றில் பங்காளராகச் செயற்படுதலே முறையாகும். தேசியக் கொடியின் முக்கியத்துவம் பற்றித் ஈழத்தமிழர்கள் நன்கு அறிந்தவர்களாதலால், அதற்கு அளிக்க வேண்டிய மரியாதையைச் செலுத்துதல் அவர்களது கடமையாகும். கனேடிய தேசிய கீதம் பாடப்படும்போது, அதனைத் தாமும் சேர்ந்து பாடுவதற்குரிய பயிற்சியைப் பெற்றிருத்தல் பெருமை தரும் செயலாகும். இப்பயிற்சியைத் தாம் அங்கம் வகிக்கும் முதியோர் மன்றங்களில் பெற்றுக்கொள்வது ஆரோக்கியமானது.

கனடாவிலே தொண்டுப் பணி (Volunteer Work) என்பதை எல்லோரும் அறிவர். இந்நாட்டிற்கு நாம் வந்தபோது எம்மை அரவணைத்து, ஆதரவு நல்கி, வாழ்வளித்து வரும் இந்நாட்டிற்கு நாம் என்ன செய்தோம் என்ற வினாவை ஒவ்வொரு முதியவரும் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இந்நாடு நமக்குச் செய்யும் பல்வேறுபட்ட பேருபகாரங்களை நாம் அறிவோம். எனவே நாம் ஒவ்வொருவரும் அவற்றின் கைமாறாகத் தம்மாலான துறைகளில் தொண்டுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். இந்நாடு எமக்கு அளித்த வாக்குரிமையை நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்தல் காலங்களில் தமது வாக்குரிமைகளைத் தவறாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் இந்நாட்டிற்கு நாம் செய்யும் கடமைகளில் ஒன்றாகும். முதியோர்களின் நலன்கருதி கனேடியஅரசும், முதியோர் மன்றங்களும் நடத்தும் பல்வேறுவகைப்பட்ட செயற்பாடுகள், கருத்தரங்குகள், பட்டறைகள், கல்வி வகுப்புகள், பொதுத் தடுப்பூசி மருந்து ஏற்றுதல் முதலான அனைத்து விடயங்களிலும் பங்குகொள்ளதல் அவசியமாகும்.

முதியவர்கள் அனுபவசாலிகள். அவர்கள் தமது அனுபவங்களை இளைய தலைமுறையினருக்குக் கையளித்தல் வேண்டும். தலைமுறை இடைவெளியைக் (Generational Gap) கண்டு பயப்படாமல் பதின்மவயதினருடன் அன்பாகப் பழகி நல்லறிவுரைகளை வழங்கி, அவர்கள் கனேடிய நாட்டின் நற்பிரஜைகளாகவும், இந்நாட்டின் நலன்கருதியவர்களாகவும் வளர்வதற்குப் பக்கத் துணையாக முதியவர்கள் செயற்பட வேண்டும். தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோருக்குச் சமூக நியமங்களையும் (Social Norms), குடும்பப் பெறுமானங்களையும் (Family Values) பக்குவமாக எடுத்துரைத்து அவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்து செயற்பட வழிவகை செய்ய வேண்டும். பதின்மவயதினரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களுக்கு உற்சாகமும் தற்றுணிபும் எற்படத்தக்கவகையில் அவர்களுடன் உரையாடி அவர்களை நெறிப்படுத்தும் பெரும் பொறுப்பும் முதியவர்களுக்கே உரியது. முதியோர்கள் தம் பேரப்பிள்ளைகளுடன் சரளமாக உரையாடுவதற்கு ஆங்கிலம் சில சந்தர்ப்பங்களில் தடையாக அமையலாம். அச்சந்தர்ப்பங்களில் முதியோரைக் கனம்பண்ணாமை, அவர்களின் அனுபவரீதியான அறிவுரைகளுக்குச் செவி சாய்க்காமை என்பன நிகழ்தல் இயல்பு. இவற்றை வெல்லத் தக்க வகையில் தாம் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதோ அல்லது பிள்ளையின் பெரும் நன்மை கருதி பிள்ளைக்குத் தமிழ் கற்பித்தலோ புத்திசாலித்தனமான செயற்பாடாகும்.

தமிழ் முதியோர் தமக்காகவும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். "தமது வாழ்க்கை கழிந்து விட்டது, இனிப் பிள்ளைகள்-பேரப்பிள்ளைகள் ஆகியோருக்காகவே நாம் வாழ்கிறோம் " என்ற தமிழினப் பண்பாட்டுணர்வு வரவேற்கத் தக்கதே. அதேவேளை முதியவர்கள் தம் ஓய்வு நேரங்களைச் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள், விளையாட்டு, சடங்குகள், விழாக்கள், ஒன்று கூடல்கள், விருந்துபசாரம் கோயில்வழிபாடு முதலியவற்றில் பங்குகொள்ள வேண்டும். இவ்வாறாக முதியோர்கள் தனக்காகவும் வாழ்ந்து, பிறர்க்குரியாளராகவும் திகழும்போதே முதியோரின் வாழ்க்கை பூரணத்துவம் பெறுகிறது.

உனக்குள் ஓர் மனம்

பலரோடு ஒற்றுமையாக ஒத்துப்போக மனம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு அலைவரிசை, ஒரு அதிர்வெண் இயங்குகிறது. இதனை இயற்கையான அதிர்வெண் (Natural frequency) என்பர். இது மனிதனுக்கு மனிதன் வேறுபட்டது. மனிதனுக்குள் உள்ள சக்திக்கும் அதிர்வெண்ணுக்கும் ஒரு தொடர்புண்டு. குவான்டம் (Quantum) பொதிகவியல்படி அச்சமன்பாடானது சக்தி E = hf. இங்கு E என்பது சக்தி, h என்பது பிளாங்கின் மாறிலி, f என்பது அதிர்வெண்ணாகும். மனிதனுக்கு மட்டும் இவ்வதிர்வெண் உண்டு என்பதில்லை. வெவ்வேறான அதிர்வெண்களை மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், மற்றும் உயிரினங்கள் உள்ளடக்கியுள்ளது. மிருகங்களின் சக்தி நுண்ணலைகளை உணரக் கூடியவை. அதனால் தான் பூகம்பம் தோன்றமுன்னரே அதிலிருந்து தோன்றும் அதிர்வுகளை உணர்ந்து செயல்படக் கூடிய திறமையுள்ளவை. இதனை 2004ம் ஆண்டு நடந்த பூகம்பம் , சுனாமியின் போது மிருகங்கள் தற்பாதுகாப்புக்காக உயர் இடங்களுக்கு ஓடியதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

பேசி பழகாத சில மனிதர்களை பார்த்தாலே, உடனடியாக அவர்களைப் பிடித்துப்போகும். கேட்டால் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். இவர்களுக்கிடையே கல்வி, அரசியல் , கலை, சிந்தனை, விளையாட்டு ஆகியவற்றில் ஒற்றுமையைக் காணலாம். அதே போன்று சிலரோடு பேசிப் பழக மனம் இடம்கொடாது. கருத்து வேற்றுமைகள் ஒற்றுமையாக இயங்கவிடாது தடுத்துவிடுகிறது. இவர்களது மனதுகளை வதந்திகள் மூலும் மாற்றுவது இலகு.. இதன் காரணம் அவர்களுக்குள் உள்ள அதிர்வெண்கள் ஒத்துப்போகாததேயாகும். மற்றவர்கள் செய்யும் தவறுகளை பெரிது படுத்தி பேசி, பரிவில் இருந்து விலகிச்செல்வர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஒருமைல் நீளமுள்ள டல்கோமா தொங்கு பாலம் இருபகுதிகளைக்கொண்டது. இது வாகனங்கள் போய்வர 1940ம் ஆண்டு ஜூலை மாதம் திறக்கபட்டது. 1940 ஆண்டு நொவெம்பர் மாதத்தில் வீசிய கடும் காற்றின் அதிர்வெண்ணும் பாலத்தின் அதிர்வெணனும் ஒத்துப் போனதால் பரிவு நிலை ஏற்பட்டு (Resonance) பாலம் ஆடத்தொடங்கி இறுதியில் முறிந்து விழுந்ததை உவமையாக பௌதிகவியல் கற்பிக்கும் போது ஆிரியர்கள் எடுத்துக்காட்டுவார்கள். நல்ல வேலை ஒருவரும் அந்த விபத்தில் இறக்கவில்லை.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்துக்குள உள்ள நீரின் அளவானது மாறுபடும் போது பாத்திரத்தின் விளிம்பின் இசைக்கவை(Tuning fork) ஒன்றை வைத்து அதிரவிடின், ஒரு குறிப்பிட்ட தண்ணீர் மட்டத்தில் ஓ ஓ வென்ற பெரும் சத்தம் பரிவு காரணமாக உருவாகிறதை மாணவர்கள் உயர்தரத்தில் பொளதிக பரிசோதனை செய்வதன் மூலம் அறிந்துள்ளனர். அதே போல் தான் இருவர் மனங்கள் ஒத்துப்போகும் போது மகிழ்ச்சியால் கட்டியணைக்கிறார்கள். கணவன் மனைவிக்கிடையே, அதிர்வெண்களின் பரிவு இருப்பின் விவாகரத்து என்பதற்கு இடமேயில்லை . "கண்டதும் காதல்" என்பார்களே, காதலன் காதலி இருவர் மனதில் உள்ள இரு இயற்கை அதிர்வெண்களிடையே பரிவு ஏற்படும் போது காதல் மலருகிறது. அந்நிலை தோன்ற சாதி, மதம், இன ஒற்றுமை அவசியமில்லை. ஒரே பால்களுக்கிடையேயும் இப்பரிவு ஏற்படலாம். எல்லாம் எமக்குள் உள்ள சக்தியின் அமைப்பாகும்.

மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இடையேயலான உறவு வித்தியாசமானது. எனது மைத்துனன் என் விட்டுக்கு வருகிறார் என்பதை அவர் வெகு துாரத்தில் வரும்போது என் வீட்டில் வளர்ந்த நாயின் அனுங்கள் சத்தத்தின மூலம் உணரலாம். " அதோ என் தம்பி வருகிறான் போல இருக்கு" என்பார் நாயின் முணங்கள் சத்தத்தை கேட்டு என்மனைவி. சில நிமிடங்களில் என் மைத்துனன் வீட்டு படலையை திறக்கும் சத்தம் கேட்டு சந்தோஷத்தால் தொடர்ந்து உளையிட்டு நாய் குரைக்கத்தொடங்கும். நேரே நாய் இருக்கும் கூட்டுக்குச் சென்று கூட்டின் கதவை திறந்து அதன் தலையை தடவிய பிறகே அம்மிருகம் சாந்தமடையும். அவ்வளவுக்கு மனிதனுக்கும் மிருகத்துக்கும் மிடையேயலான பரிவுண்டு. அது அவ்வாறாயின் மனிதர்களுக்கிடையே ஏன் ஒற்றுமை இருக்க கூடாது?.

கிளிகள் . மைனாக்கள் வெகு விரைவாக மனிதனைப்போல் பேசக் கற்றுக்கொள்கின்றன. அது மடடுமல்ல மனிதர்களின் மனதையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவை. வீட்டில் பறவைகளை வளர்க்க பல மனிதர்கள் ஆர்வம் காட்டுவார்கள்.

ஒரே அலை நீளத்தில் சிந்திப்பதால் பல திட்டங்களை திறம்பட செய்து முடிக்க முடியும். சிலருக்கு மற்றவர்கள் மனதில் உள்ளதை அல்லது அவர்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் எனபதை முன் கூட்டியே அறியக்கூடிய திறமையுண்டு. இது ஆன்மீக வாழக்கை வாழும் பலருக்குண்டு. இரமணமஹாரிஷி, இராம கிருஷ்ணர் , சாய்பாபா, யோகர் சுவாமிகள் போன்றோருக்கு தமக்குள்

உள்ள அதிர்வெண்ணை மாற்றும் சக்தி இருந்ததாக சொல்வார்கள். அதனாலே ஒருவரை பார்த்தவுடன் மனதில் உள்ளதை புரிந்து தக்க பதில் அளிக்கும் வள்ளமை படைத்தவர்கள். ஒரு காலத்தில் இந்து நதி பல்லத்தாக்கில் வாழந்த ரிஷிகள் இயற்கையோடு உறவாடி, அதனுள் புதைந்துள்ள இரகசியங்களை அறிந்து. இந்து மதத்தின் நான்கு வேதங்களையும் உருவாக்கினா் எனபா்.

நல்ல மனம், நல்ல சக்தியை கொண்டது. நல்லதே நடக்க வேண்டும் என் நினைப்பார்கள். மனமே சக்தியின் இருப்பிடம். ஆகவே மனமே கடவுள்.

கட்டுரை

வீ.ந.சோமசுந்தரம்

தங்கம்மா அப்பாக்குட்டி

ஈழமண்ணில் அரைநூற்றாண்டுக்கு மேல் தமிழும் சைவமும் வளர்த்த சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள்

